# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. II Issue 3 June 2012

இம்மாத மலரில். . . .

பொருளடக்கம்

பக்கம்


லைப் டிவைன் ... 2

இம்மாதச் செய்தி ... 14

சாவித்ரி ... 15

யோக வாழ்க்கை விளக்கம் VI ... 17

பூரணயோகம் - முதல் வாயில்கள் ... 22

அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ... 25

லைப் டிவைன் - கருத்து ... 30

அஜெண்டா ... 32

அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் ... 35

அகல்யை என்று நினைத்தனையோ? ... 42

நம்முடைய Higher Selfஐ மதித்து நடத்தல் ... 54


கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**ஆன்மா அதிவேகமாகச் செயல்படும். ஆன்மா செயல்படும் பொழுது நாம் செய்வதற்கு ஒன்றுமே இல்லை என்று தெரிய வரும்.**

**நாம் உள்ளே நல்லவிதமாக இல்லாமல் நம்மை நாடி வெளியிலிருந்து நல்லது வாராது. இருந்தாலும் நாம் அதையே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது.**

**சென்றது மனம் மாறினால் உயர்ந்த சேவை செய்யும். மனம் மாறியபின் அவன் பழைய மனிதனிலன்.**

**காலம் விரயமாகவில்லை. காலத்தைக் கடந்த யுகங்களை மனிதன் விரயமாக்குகிறான்.**

# லைப் டிவைன்

கர்மயோகி

## XXIII. The Double Soul In Man

We found the first status of Life. *Page No.218*
It is characterised by a dumb inconscient drive. *Para No.1*
Or it is an urge.
It is force of some involved will.
It is involved in the material existence.
Or it is an atomic existence.
It is not free.
It is not a possessor of itself.
Or its works or their results.
But it is entirely possessed by the universal.
It arises in it.
It arises as something obscure.
It is there as an unformed seed of individuality.
The root of the second status is desire.
It is eager to possess.



## 23. மனிதனுள் இரட்டை ஆத்மா

வாழ்வின் முதல் நிலையைக் கண்டோம்.
ஊமையான ஜடம் அதை உந்துவதைக் கண்டோம்.

அல்லது அது ஓர் உத்வேகம்.
உள்ளே கலந்துள்ள உறுதியின் சக்தியிது.
அது ஜட வாழ்வில் கலந்துள்ளது.
அல்லது அது அணு வாழ்வாகும்.
அது சுதந்திரமானதல்ல.
தன் மீது ஆதிக்கமுள்ளதல்ல.
அதன் செயல் மீதோ பலன் மீதோ ஆதிக்கமுள்ளதல்ல.
அது முழுவதும் பிரபஞ்ச சலனத்திற்குட்பட்டது.
இது அதில் பிறக்கிறது.
விவரமற்றதாக ஜனிக்கிறது.
உருவமற்ற ஜீவனுடைய வித்தாகக் காண்கிறது.
இரண்டாம் நிலையில் வேர் ஆசை.
ஆதிக்கத்திற்கு ஆர்வமானது.

But limited in capacity.
The bud of the third is Love.
It seeks to possess.
Also it seeks to be possessed.

It seeks to receive.
It seeks to give itself.
There is a fine flower of the fourth.
It is its sign of perfection.
We conceive of it as Will.
It is pure.
It is the full emergence of the original will.
It is of the intermediate desire.
It is the illumined fulfillment of it.
It is the high and deep satisfaction.
It is of the conscious interchange of Love.
It is by the unification.
It is of the possessor and the possessed.
It is in the divine unity of souls.
It is the foundation.
It is of the supreme existence.
Let us take these terms.
Let us scrutinise.
We shall see they are shapes.
They are the stages of souls.
The soul's seeking is for delight.
They seek individual delight.



ஆனால் திறமை குறைந்தது.
மூன்றாம் நிலையின் மொக்கு அன்பு.
அது ஆதிக்கம் செய்ய விழைகிறது.
மேலும் அன்பு தன்னை ஆதிக்கத்திற்கு உட்படுத்த
விழைகிறது.
பெற விழைகிறது.
கொடுக்கவும் பிரியப்படுகிறது.
நான்காம் நிலையின் இனிய மலருண்டு.
அதன் சிறப்பின் அடையாளமிது.
நாம் அதை உறுதியாக அறிகிறோம்.
அது தூய்மையானது.
மூலமான உறுதியின் முழு வெளிப்பாடு அது.
அது இடைப்பட்ட ஆசைக்குரியது.
அதன் ஜோதிமயமான பூரணம்.
அதன் உயர்ந்த ஆழ்ந்த திருப்தி.
அது தெளிந்த அன்பின் பரிமாற்றம்.
அதை அது ஐக்கியத்தால் பெறுகிறது.
ஆதிக்கம் செய்பவர், அதற்குட்பட்டவர் ஐக்கியம் அது.
தெய்வீக ஆன்மீக ஒற்றுமை அது.
அது அடிப்படை.
அது பெருவாழ்விற்குரியது.
இவற்றை நாம் கருதுவோம்.
நாம் இவற்றை ஆராயலாம்.
இவை உருவங்கள் எனத் தெரியும்.
இவை ஆத்மாக்களின் பல நிலைகள்.
இது ஆத்மாவின் தேடலாகும், ஆனந்தத்தைத் தேடுகிறது.
சொந்த ஆனந்தம் தேடுகிறது.

It seeks universal delight.
There is the ascent of life.
It is the ascent of divine Delight in things.
From the dumb conception in Matter.
It goes through vicissitudes.
It goes through opposites.
It goes to the luminous end.
It is in spirit.

***Page No.219***
***Para No.2***

We know what the world is.
Therefore it could not be otherwise.
The world is a form of Sachchidananda.
It is a masked form of it.
It is also of the nature of Sachchidananda.
Therefore it is the thing in which His Force must act.
What it must find and achieve itself is divine Bliss.
It is an omnipotent self-delight.
Life is an energy of His conscious-force.
There is a secret of all its movements.
It must be a hidden delight.
It is inherent in all things.
It is the cause.
It is at once motive and object of its activities.

There is an egoistic reason.
It is by division.



அது பிரபஞ்ச ஆனந்தம் தேடுகிறது.
வாழ்வின் உயர்வு உண்டு.
அது தெய்வீக ஆனந்தம் தேடுகிறது.
அது ஜடத்தில் ஊமை உணர்வில் ஆரம்பிக்கிறது.
அது ஏறி இறங்குகிறது.
அது எதிரானவற்றை எட்டுகிறது.
அதன் ஜோதிமயமான முடிவை நாடுகிறது.
அம்முடிவு ஆன்மாவில் உள்ளது.

உலகம் உள்ள நிலையை நாமறிவோம்.
எனவே அது வேறாக இருக்க முடியாது.
உலகம் சச்சிதானந்த ரூபம்.
அது முகமூடியான ரூபம்.
அத்துடன் அது சச்சிதானந்தத்தின் இயற்கையின் ரூபம்.
எனவே அதன் சக்தி செயல்படும் இடமாகும் அது.

அதைக் கண்டு சாதிக்க வேண்டியது தெய்வீக ஆனந்தம்.

அது எல்லாம்வல்ல சுயமான ஆனந்தம்.
வாழ்வு அதன் தெளிந்த சக்தியின் சக்தி.
அதன் செயல்களில் ஒரு இரகஸ்யம் உண்டு.
அது மறைந்துள்ள ஆனந்தம்.
அது எல்லாவற்றிலும் இயற்கையாக உள்ளது.
அதுவே காரணம்.
அத்துடன் அதன் செயல்கட்கெல்லாம் நோக்கமாகவும் குறிக்கோளாகவுமுள்ளது.
அதில் அகந்தைக்குரிய காரணம் உண்டு.

Thus the delight is missed.
It is held back behind the veil.
It is represented as its own opposite.
Maybe the being is masked in death.
Consciousness figures as inconscient.
Force mocks itself as incapacity.
Then that which lives cannot be satisfied.
It cannot either rest from the movement.
Or cannot fulfil the movement.
It can be done only by laying hold on it.
It is the universal delight.
It is its secret delight.
It is the total delight of the being.
It is of the immanent Sachchidananda.
It is original, all-encompassing, all-informing, all-upholding.
Life seeks delight.
It is its sense.
It is its fundamental impulse.
It wants to find the delight.
It wants to possess and fulfil it. It is its whole motive.

There is this principle of Delight. ***Page No.219***
But where in us is it? ***Para No.3***
Through what term of our being does it manifest?



அது பிரிவினையால் ஏற்பட்டது.
அவ்விதம் ஆனந்தம் தவறும்.
அது திரைமறைவில் உள்ளது.
அதன் எதிராக அது காட்டப்படுகிறது.
ஜீவன் மரணத்துள் மறைந்திருக்கலாம்.
ஜீவியம் ஜடமாக இருக்கலாம்.
சக்தி பலஹீனமாக இருக்கலாம்.
அந்நிலையில் உள்ளது திருப்திபட முடியாது.
அது அசையாமலுமிருக்க முடியாது.
அசைவைப் பூர்த்தி செய்யவும் முடியாது.
அதை வென்றாலன்றி செய்ய முடியாது.
அப்படி வெல்ல வேண்டியது பிரபஞ்ச ஆனந்தம்.
அதுவே அதன் இரகஸ்ய ஆனந்தம்.
அதன் ஜீவனின் முழு ஆனந்தம் அது.
அது அதனுள் உள்ள சச்சிதானந்தத்துடையது.
மூலமான முழுமையைத் தழுவும், முழுமையை ஆதரிக்கும், முழு விவரமுள்ளது.
வாழ்வு ஆனந்தத்தை நாடுகிறது.
அதன் உணர்வு அதுவே.
அதன் அடிப்படையான உந்துதல் அது.
ஆனந்தத்தை அடைய முயல்கிறது.
அதைப் பெற்றுப் பூரணம் பெற விரும்புகிறது. அதன் முழு நோக்கம் அது.

ஆனந்தம் என்பது தத்துவம்.
நம்மில் ஆனந்தம் எங்கு உறைகிறது?
நம்முள் உள்ள எந்தக் கரணம் மூலம் அது வெளிப்படுகிறது?

Ananda fulfils itself in action.
It is the action of the cosmos.
It appears there as a principle of Conscious-Force.
It uses Life for its cosmic term.
There is the principle of Supermind.
It uses Mind and manifests.
The Divine Being created the universe.
We distinguished a fourfold principle there.
They are Existence, Conscious-Force, Bliss, Supermind.
Supermind is omnipresent.
We have seen it.
It is so in the material universe.
But it is veiled.
It is behind the actual phenomenon of things.
It expresses occultly.
It operates secretly.
Life is its subordinate term.
It expresses in it characteristically.
Matter is a separate principle.
We have not yet examined it.
The divine All-existence is also omnipresent.
It is in the material cosmos.
It manifests there initially.
It does so through its own subordinate term.
Substance is that.
Substance is Form of being.



ஆனந்தம் செயலில் தன்னைப் பூர்த்தி செய்து கொள்கிறது.
அது பிரபஞ்ச செயல்.
அது அங்கு சித்-சக்தியாக வெளிப்படுகிறது.
வாழ்வைப் பிரபஞ்ச அரங்கமாகப் பயன்படுத்துகிறது.
சத்திய ஜீவியம் என்ற தத்துவம் உண்டு.
அது மனத்தைப் பயன்படுத்தி வெளிப்படுத்துகிறது.
இறைவன் உலகைப் படைத்தான்.
அதில் இறைவனுடைய நாலு தத்துவங்களைக் கண்டோம்.
அவை சத், சித்-சக்தி, ஆனந்தம், சத்திய ஜீவியம்.

சத்திய ஜீவியம் எங்கும் உள்ளது.
நாம் அதைக் கண்டோம்.
அது ஜட உலகில் உள்ளது.
ஆனால் திரைமறைவில் உள்ளது.
சத்திய ஜீவியம் பொருள்களின் தோற்றத்திற்குப் பின் உள்ளது.
கண்ணுக்குத் தெரியாமல் அது வெளிப்படுகிறது.
அது இரகஸ்யமாகச் செயல்படுகிறது.
வாழ்வு அதன் உட்பிரிவு.
அங்குத் தன் அம்சம் வெளிப்படும்படி செயல்படுகிறது.
ஜடம் தனித் தத்துவம்.
இதுவரை நாம் அதை ஆராயவில்லை.
எல்லாமான இறைவனும் எங்கும் நிறைந்தவன்.
ஜடமான பிரபஞ்சத்தில் அது உள்ளது.
ஆரம்ப நிலையில் அது அங்கு வெளிப்படுகிறது.
அதன் உட்பிரிவில் அது வெளிப்படுகிறது.
அது பொருள்.
ஜீவனின் ரூபம் பொருள்.

It is Matter.
It is hidden behind the actual phenomenon of things.

Bliss too is a divine principle.
It must be omnipresent in the cosmos.
It is equally true.
It too is veiled.
It also will possess itself.
It must be behind the actual phenomenon of things.
Still it is manifested in us.
It must be through a subordinate principle.
It is its own.
It is hidden in it.
By which it must be found.
Thus it must be achieved in the action of the universe.

*Contd....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***தனக்குள்ளது பிறருக்கில்லை என்பது பெருமை.***
***பிறருக்குள்ளது தனக்கில்லை என்பது குறை.***
***தனக்குள்ளது பிறருக்கு வேண்டும் என்பது நிறைவு.***



அது ஜடம்.
பொருள்களின் தோற்றத்தின் பின்னால் அது மறைந்துள்ளது.
ஆனந்தமும் இறைவனின் தத்துவம்.
அதுவும் பிரபஞ்ச முழுவதும் இருக்க வேண்டும்.
அதுவும் உண்மை.
அதுவும் மறைந்திருக்க வேண்டும்.
அதுவும் தன்னைப் பெற்றிருக்கும்.
அது பொருள்கள் தோற்றத்தின் பின்னிருக்கும்.
இருந்தாலும் அது நம்முள்ளிருந்து வெளிப்படும்.
அதுவும் ஓர் உட்பிரிவின் மூலம் வெளிப்படும்.
அவ்வுட்பிரிவு அதனுடையது.
அதனுள் அது மறைந்திருக்கும்.
அதன் மூலம் அதைக் காண வேண்டும்.
பிரபஞ்ச செயலில் அதை நாம் அப்படி அடைய வேண்டும்.

*தொடரும்......*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***என்ன செய்ய வேண்டும் என்பது இரகஸ்யம்.***
***ஏன் செய்ய வேண்டும் என்பது தத்துவம்.***

இம்மாதச் செய்தி

**பதவியை, வரலாற்றில்**

**விரும்பித் துறந்த ஒரு**

**மனிதர் மகாத்மாகாந்தி.**





## P.139 Arriving with heavy eyes that hardly see

**பார்க்க முடியாத நேத்திரங்களை எடுத்து வந்து**

- ☆ ஆசையும் உணர்ச்சியும் மாறுவேடத்தில் வருகின்றன
- ☆ ஓடும் நதியில் மிதக்கும் களையென
- ☆ எழுவதும் மறைவதும் ஏவலுக்குக் கட்டுண்ட வாழ்வு போல்
- ☆ அவை அசுத்தமானவை, அவளசைவுகள் மட்டமானவை
- ☆ இறைவனின் சத்தியம் இகவாழ்வின் ஆழத்தில் புதையாத நேரமில்லை.
- ☆ கடைசி கட்டத்தினரிடத்திலும் ஆர்வம் காணாததில்லை
- ☆ எங்கெல்லாம் சிருஷ்டியுண்டோ அங்கெல்லாம் இறைவனின் ஸ்பர்சம் உண்டு
- ☆ இழந்த ஆனந்த மகிமையின் இன்ப நினைவு இல்லாமலில்லை
- ☆ பிறப்பிலும் இறப்பிலும் பிசிறென ஒட்டிக் கொண்டிருக்கிறது
- ☆ உலகின் உணரமுடியாத அழகு பிரதிபலிக்கும் இறைவனின் ஆனந்தம்
- ☆ அப்பூரிப்பின் புன்னகை எங்கும் தவழும் இரகஸ்யம்
- ☆ காற்றுடன் கலந்து வரும், மரத்தின் சத்தாக மணக்கும்
- ☆ இலையிலும் மலரிலும் எழிலாக மணக்கும் மகிமை
- ☆ வாழ்வின் மயக்கம் மரத்திலுதித்தது போல்

☆ உணர்வு தரும் வேதனை குரலாக எழவில்லை
☆ விலங்கிலும் பறக்கும் பறவையிலும் சிந்திக்கும் மனிதனிலும்
☆ இதயத் துடிப்பை இசையின் தாளமாக மாற்றி
☆ உயிரற்ற சதையை உணர்வு பெற எழுப்பி
☆ மகிழ்ச்சியை நாடி மனவேதனை பெற்று
☆ சொற்ப சந்தோஷம் புளகாங்கிதமாகப் புல்லரித்து
☆ வலியால் துடித்து, பூரிப்புக்கு ஏங்கி
☆ குரலையிழந்த, தவறாகப் புரியும், தடையற்ற சட்டம்
☆ ஜோதியிலிருந்து விலகி, மூலத்துடன் நெருங்கி
☆ உணர்வோடு கலந்து, உரிய மகிழ்வை இழந்து
☆ ஆத்மாவின் ஆசை அழிபவற்றை ஆர்வமாக நாடும்
☆ எவரும் தடுக்க முடியாத இயற்கையின் வேகம்
☆ கொதித்தெழும் இரத்தம், சூடுபெற்ற உணர்வு
☆ சொந்த வேலையில் பிரம்மம் கண்ட பூரிப்பு
☆ உலகின் உண்மையை காமமாகவும் காதலாகவும் காண வைக்கிறது
☆ வென்று, பெற்று, ஆண்டு அனுபவிக்கும் உறுதி
☆ வாழ்வை அனுபவிக்கும் அரங்க வளமாக்கி

❋❋❋



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/64) துரோகியைக் கையும் களவுமாகப் பிடித்தும் அவனைத் தொழிலதிபராக்க முனைவது உடல் உணர்வை சொரணையற்ற முறையில் விட முயல்வதாகும்.**

☆ **எதிரிக்கு எல்லாம் தரும் சொரணை வெட்கம் கெட்டதல்ல, வெட்கத்தை விட்டு வெற்றியை நாடுவது.**

☆ ஒருவருக்குக் கஷ்டம் வந்த நேரம் உண்மையான நண்பர்களை அறிய முடியும்.
☆ ஒருவனை முழுவதும் அறிய வேண்டின் அவனுக்கு முழு சுதந்திரம் தர வேண்டும்.
☆ கிருஸ்டபர் சிலை என்பவன் குடிகாரன்.
☆ அதிகமாகக் குடித்துப் போதையில் தன்னை மறந்து வழியில் கிடந்தான்.
☆ அந்த வழியாக வந்த பிரபு தன் பரிவாரத்தை அவனை எடுத்து வரும்படி கூறினார்.
☆ அவனை உயர்ந்த படுக்கையில் படுக்க வைத்து, பிரபுவின் உடைகளை அணிவிக்குமாறு கூறினார்.
☆ தானே மயக்கம் தெளிந்தது.
☆ உடனிருந்தவர்கள் அவனைப் பிரபுவாக நடத்தி நடித்தனர்.
☆ அவர் பிறவிலேயே பிரபு எனவும், போதையில் தன்னை மறந்தார் எனவும் கூறினர்.
☆ கிருஸ்டபருக்கு கொஞ்ச நேரம் புரியவில்லை.
☆ நாடகம் தொடர்ந்ததால், அவர்கள் கூறியது பொய் எனத்

தெரிந்தும் அதை ஏற்று அவன் பிரபுவாக நடித்தான்.

- ☆ சௌகரியம் எந்த அளவு நம்ப முடியாதது என்றாலும், நடக்கும் எனில் மனிதன் நடத்திக் கொண்டு, அடுத்த அடுத்த கட்டங்களை இயல்பாக எதிர்பார்ப்பான். இது மனித சுபாவம்.
- ☆ பண்பு காரணமாகப் பிறர் கூறும் பொய்யை மறுத்து அவரை அம்பலப்படுத்தாவிட்டால், அதுவே உண்மையென மனிதன் சாதிப்பான்.
- ☆ பிச்சைக்கார புத்தியுள்ளவனைக் குருவாக ஏற்றதாக நடித்தால், அவன் தன் ஆசிர்வாதத்தைத் தரச் செய்யும் கிராக்கி உலகப் புதுமையாகும்.
- ☆ ஏழையை, அடுத்த வேளை சாப்பாட்டிற்கும் இல்லாத ஏழையை, ஏழையாக நடத்துவது பண்பற்றது என்பதால் சமமாக நடத்தினால் நடத்துபவரை ஏழையென தைரியமாகக் கூறி அவரையே குறைத்துப் பேச முனைவான்.
- ☆ தாழ்ந்த மனிதனுக்கு வலிய உதவினால் ஆதாய மனப்பான்மையென நினைப்பான். என்ன ஆதாயம் எனக் கேட்டு விடுவான்.
- ☆ பெரிய பதவியில் உள்ள சிறிய மனிதனைக் காணப் போனால் என்ன காரியம் ஆக வேண்டும் எனக் கேட்பான்.
- ☆ 50 ஆண்டு பட்டினியிருந்தவனுக்கு வசதி செய்து, வீட்டில் விருந்து செய்தால், விருந்து செய்பவர் தாழ்ந்தவர் எனக் கருதி அவரை நிமிர்ந்தும் பார்க்க மாட்டான்.
- ☆ மனிதன் திருவுருமாற்றம் தேடுவதில்லை.
- ☆ திருவுருமாற்றம் தேடுபவரே இது போன்ற வேலைகளைச் செய்வார்.
- ☆ கெட்ட நடத்தையால் கருத்தரித்த மனைவியும் மனம் புண்படக் கூடாது என்று அதைக் கண்டுகொள்ளாத கணவனைத் தன் நடத்தையால் அவன் ஆதாயம் பெற முயல்வதாக நினைப்பாள், கூறுவாள், அவனையே கேட்பாள்.



- ☆ சமூகத்தில் அவரவரை அவரவர் நிலைக்கேற்ப நடத்தாவிட்டால், நடத்தாத பண்பு கயமை, ஆதாயம் தேடுவதாக நினைப்பார்கள்.
- ☆ திருவுருமாற்றம் தேடுபவனுக்கு அது போல் தாழ்ந்த சொற்கள் மேலும் அவனுக்கு உயர்ந்த திருவுருமாற்றத்திற்குரிய அம்சமிருப்பதாகக் கூறும்.
- ☆ மனிதனையறிய இருளையறிய வேண்டும்.
- ☆ இருளிலிருந்து வெளிவரும் மனிதன் எவருக்கும் எந்த துரோகமும் செய்வான்.
- ☆ தாழ்ந்தது உயர முயலும் பொழுது துரோகத்தை இயல்பாக நாடும்.

✲✲✲

## II/65) உதாரணத்தால் புரிவது புத்தியில்லை, நடைமுறை அறிவு.

☆ **புத்திக்கு உதாரணம் தேவையில்லை.**

- ☆ மனம் என்பது நம் கருவி.
- ☆ அது நம் கட்டுப்பாட்டிலிராது.
- ☆ அதற்கென சில குணங்கள் உண்டு.
- ☆ அதன் குணங்கள்படி செயல்படும், நம் கருவியானாலும் நம் சொல்படி செயல்படாது.
- ☆ பகுதியான மனம் முழுமையான மனிதனைவிடச் சக்தி வாய்ந்தது.
- ☆ ஒரு கனடா பெண்ணுக்குக் கான்சர் வந்தது.
- ☆ டாக்டர் கட்டியின் அளவைப் பார்த்து ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்றார்.

- ☆ ஆப்பரேஷன் முடிந்த பிறகு மற்ற இடங்களில் பரவாமலிருந்தால் பிறகு சொல்லலாம் என்றார்.
- ☆ அப்பெண்ணுக்கு ஆப்பரேஷன் அபிப்பிராயமில்லை.
- ☆ அன்னையிடம் பிரசாதம் பெறும்படி மகன் கூறினார்.
- ☆ பிரசாதம் வந்தது.
- ☆ கட்டி கரைந்தது, வலி மறைந்தது.
- ☆ டாக்டருக்கு ஆச்சரியம், இனி பயமில்லை என்றார்.
- ☆ பெண்ணுக்குரிய பிரச்சனை வேறு.
- ☆ மகனும் தாயும் பேசினர்.
- ☆ மகன் அன்னை கான்சரைக் குணப்படுத்திவிட்டதாக நம்பினார்.
- ☆ தாய்க்கு எப்படி குணமாயிற்று என்று தெரிந்து கொள்ள அவசியம் உண்டு.
- ☆ டாக்டரைக் கேட்டார். டாக்டர் குணமாயிற்று எனத் தெரியும், எப்படி எனத் தெரியாது என்றார்.
- ☆ அன்னை சக்தி குணப்படுத்தியது என டாக்டர் கூறினால் நம்புவேன், இல்லாவிட்டால் எனக்கு நம்பிக்கை ஏற்படாது என்றார்.
- ☆ வலியும், கட்டியும் போய்விட்டனவே என்றார் மகன்.
- ☆ தாய் நடந்ததை நம்பவில்லை, டாக்டரை நம்பினார். டாக்டர் தெரியாது என்றார்.
- ☆ கட்டி வளர்ந்தது, கான்சர் வந்தது, தாயார் இறந்து போனார்.
- ☆ இது மனம் செயல்படும் வகை.
- ☆ உதாரணம் அவர் அனுபவம்.
- ☆ பழைய அனுபவத்தை நம்புகிறார்.
- ☆ உதாரணம் அதைக் காட்டுவதால், உதாரணத்தை நம்புகிறார்.



- ☆ உதாரணத்தை நம்புபவருக்கு பழைய அனுபவம் தெரியும்.
- ☆ அவருக்கு நேரடியாகப் புரிந்து கொள்ளும் புத்தியில்லை, உதாரணம் மூலம் புரிகிறது.
- ☆ புத்தி செயல்படுவது ஆச்சரியமாக இருக்கும்.
- ☆ மருந்து எனக் கூறி வெறும் பவுடரைக் கொடுத்தால் 100இல் 70 பேருக்குக் குணமாகிறது.
- ☆ சாப்பிட்டது மருந்தில்லை எனத் தெரிந்தால், மீண்டும் வியாதி வருகிறது.
- ☆ மனம் உடலைவிடப் பெரியது. Mind over Matter என இதைக் கூறுவார்கள்.
- ☆ பகவான் வரும்வரை கர்மம் ஆட்சி செலுத்தியது.
- ☆ அவர் பிறந்த பின் கர்மத்திற்குச் சக்தியில்லை.
- ☆ நம்பாதவர்களைக் கர்மம் பாதிக்காது.
- ☆ மேலும் கர்மம் திருவுருமாறி பிரச்சனை வாய்ப்பாகும்.
- ☆ மனமும், புத்தியும் நம் கருவிகளானாலும் அவை நம் கட்டுப்பாட்டில் இரா.
- ☆ அவை ஆத்மாவின் கட்டுப்பாட்டிலிருக்கும்.

*தொடரும்....*

❋❋❋

**ஜீவிய மணி**

***ஆன்மாவுக்கு மனம் தேவையில்லை.***

***வந்த வழி தெரிந்தால், போகும் வழி புரியும்.***

***அகந்தையை இழந்தால் அனைத்தும் பெறலாம்.***

***திருந்த வேண்டியவன் திருத்த முடியாது.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

**59. அருள் முன்கூட்டியே காரியங்களை முடிக்கிறது - அருள் காலத்தைக் கடந்தது.**

☆ எலிசபெத் மனம் மாறியதால் டார்சி அங்கு வந்தான் எனில் அவள் 10 நிமிஷத்திற்கு முன் மனம் மாறினாள், அவன் 3 மணிக்கு முன் புறப்பட்டான். எப்படிச் சரி வரும்?

☆ **அருளுக்குக் காலமில்லை, அது காலத்தால் கட்டுப்பட்ட-தில்லை, காலத்தைக் கடந்தது**.

☆ அருள் செயல்பட இடையில் ஒருவருமில்லாதது, எதுவுமில்லாதது நல்லது.

☆ இந்திராவை அன்னையிடம் அழைத்து வந்தது மத்திய மந்திரி சபையிலிருந்த நந்தினி.

☆ ஆசிரமப் பள்ளிக்கு 1½ இலட்சம் ரூபாய் கிராண்ட் கேட்டு டெல்லி சர்க்காருக்கு விண்ணப்பம் தயாரித்தனர்.

☆ விண்ணப்பத்தைத் தபாலில் அனுப்பாமல் நேரடியாகச் சமர்ப்பிக்க அன்னை முடிவு செய்தார்.

☆ பள்ளிக்கூட ரிஜிஸ்டாரை அதை எடுத்துப் போகச் சொன்னார்.

☆ பிரதமரைச் சந்திப்பது எளிய காரியமில்லை.

☆ நந்தினியைச் சுலபமாகச் சந்திக்கலாம்.

☆ பிரதமருக்கு நேரடியாக வேண்டியவர் பலர் ஆசிரம அன்பர்கள்.

☆ ரிஜிஸ்டாருக்கு டெல்லிக்குப் போனபின் தயக்கமாயிற்று, தைரியம் போய் தயக்கம் வந்தது.



☆ புறப்படும் பொழுது அன்னையிடம் யார் மூலம் பிரதமரைச் சந்திப்பது எனக் கேட்கவில்லை,

☆ கேட்கத் தோன்றவில்லை.

☆ டெல்லியிலிருந்து யார் மூலம் பிரதமரை அணுகுவது எனத் தந்தி அனுப்பினார்.

☆ **நேராகப் போ, எவர் உதவியையும் நாடாதே என அன்னை பதில் தந்தி அனுப்பினார்**.

☆ பிரதமரை நேராகப் போய்ப் பார்ப்பது மந்திரி சபை உறுப்பினர்கட்கும் எளிதல்ல.

☆ அது நாட்டில் முதன்மையான இடம்.

☆ அவரை 1000 பேர் சந்திக்க முயன்றால் 3, 4 பேருக்கே அனுமதி கிடைக்கும்.

☆ காமராஜ் முதன் மந்திரியாக இருந்தபொழுது நேருவைச் சந்திக்க முடியவில்லை.

☆ T.T.K. முயன்று மூன்று நாள் கழித்து அனுமதி கிடைத்தது.

☆ நேரடியாகப் பிரதமர் வீட்டினுள் நுழைந்தால் உடனே கைது செய்யப்படுவார்.

☆ ரிஜிஸ்டார், IAS அதிகாரி. அத்தனை விவரமும் தெரிந்தவர்.

☆ அன்னை உத்தரவிட்டபின் தயங்க உரிமையில்லை.

☆ காலை 7½ மணிக்குத் தயங்கித் தயங்கி காம்பவுண்டைக் கடந்து உள் சென்றார்.

☆ சுவர் மறைவில் உள்ள செடிகளுக்கு நீர் பாய்வதை இந்திரா பார்த்துக் கொண்டிருந்தார்.

☆ ரிஜிஸ்டார் உள்ளே நுழைந்ததும், பிரதமரை நேருக்கு நேர் சந்தித்தார்.

☆ யார் என்றார் பிரதமர்.

- ☆ அன்னை அனுப்பினார் என்றார் ரிஜிஸ்டார்.
- ☆ உடனிருந்த IAS ஆபீசரைப் பார்த்து ரிஜிஸ்டாருக்கு வேண்டியதைக் கேட்டுக் கொடுத்தனுப்பவும் என உத்தரவு பிறப்பித்தார்.
- ☆ ரிஜிஸ்டார் புதுவையில் புறப்படும்முன் அருள் செய்த ஏற்பாடு இது.
- ☆ நேரடியாகப் போன பலன்.
- ☆ எவர் மூலமாகவும் போனால், எதுவும் நடக்காது. பல நாள் ஆகும்.
- ☆ நாம் செயல்படும் முன், நினைக்கும் முன், நாம் போகுமிடமெல்லாம் போய் செய்ய வேண்டியவற்றை முன்கூட்டி ஏற்பாடு செய்து வைப்பது அருள்.
- ☆ அது அன்னை அருளானால் புறப்படுமுன் ஆர்டர் வந்துவிடும்.

*தொடரும்.....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அம்மா, என் அந்தரங்கம் நீ அறிவாய்.***
***நீ அறிவாய் என நான் அறிவேன்.***
***இருந்தும் அங்கு உன்னை இதுவரை நான் அனுமதிக்கவில்லை.***
***அனுமதிக்க மனம் வரவில்லை.***
***"என் அகங்காரத்தை அழித்து***
***நீயே என் அந்தரங்கமாக வேண்டும்***
***எனப் பிரார்த்திக்கின்றேன்".***
***அகந்தையான அந்தரங்கம் அன்னையாக வேண்டும்.***



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## ✡ பணம்

- ☆ பணம் மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. அதாவது மனத்தால் ஏற்படுத்தப்பட்டது.
- ☆ பண்டமாற்றுக்காக ஏற்பட்டது பணம். பணம் அதன் கருவி.
- ☆ கருவியை முக்கியமாகக் கருதினால் அது கர்த்தாவை ஆளும்.
- ☆ கை மாறும் பண்டங்களும், மாற்றும் மனிதர்களும் பணத்துடன் தொடர்பு கொள்வதால் அவர்கள் இசைந்தால் அப்பண்டங்களையும், அம்மனிதர்களையும் பணம் ஆளும்.
- ☆ பண்டமாற்றுக்காக ஏற்பட்ட பணம் நாளடைவில் குடும்பம், விவசாயம், வியாபாரம், கல்வி, போக்குவரத்து, சர்க்கார், வெளிநாட்டு வியாபாரம் என எல்லா துறைகட்கும் பரவியது. இன்று பணம் புழங்காத இடமில்லை. பணத்தால் சாதிக்காத காரியமில்லை. அத்தனையிடங்களையும் பணம் எதேச்சாதிகாரமாக ஆள்கிறது. மனம் - பணத்தை உற்பத்தி செய்த மனம் - தன்னையறிந்தால் பணம் அதற்குக் கட்டுப்படும்.
- ☆ உலகம் உள்ளேயிருப்பதால், பணம் அதன் பகுதி-யென்பதால் பணம் மனத்திற்குக் கட்டுப்படுவது ஆச்சரியமில்லை.
- ☆ பணம் என்பது செயல்படும் ஸ்தாபனம் organisation.

Organisationக்கு உற்பத்தி ஸ்தானம் மனம். பணத்தின் organisation மனத்திலிருந்து வந்தது. மனம் தன் organisationஐ அறிந்தால் பணம் அந்த அளவுக்கு மனத்திற்குக் கட்டுப்படும். Organisation என்பதைத் திறமை என்கிறோம்.

- ⭑ இந்த ஸ்தாபனம் ஒத்துழைப்பால் செயல்படுகிறது. Organisation works by cooperation and coordination. இரண்டும் சுமுகத்தால் செயல்படுகின்றன. Both work by harmony. மனம் சுமுகமானால் அதன் organisation வளரும். சுமுகம் என்பது பிறர் தனக்கு எப்படி அத்தியாவசியமானவர் என்பதை அறிவது. அதையறிய தான் பிறருக்கு அத்தியாவசியமானவராக மாற வேண்டும். அது சுமுகம்.

அதன் நிலைகள் மூன்று. (1) மனம், (2) உயிர், (3) உடல்.

மனம் - அடுத்தவர் எண்ணத்திற்கும் நம் எண்ணத்திற்கும் சுமுகம் harmony வேண்டும். பிணக்கொழிய வேண்டும். (Non-reaction is necessary. Better still you have to appreciate all ideas of others). எரிச்சல்படக் கூடாது. அதைவிட மற்றவருடைய எல்லா கருத்துகளையும் பாராட்ட வேண்டும்.

உயிர் - அடுத்தவர் உணர்ச்சி நமக்கு இதமாக இருக்க வேண்டும்.

உடல் - அடுத்தவர் செயல் எதுவானாலும் அது நமக்கு இலாபமானது எனப் புரிய வேண்டும்.

மேற்கூறிய சுமுகம் மனத்தின் organisationக்கு அளவுகோல்.

இந்த organisation சந்தோஷம் தருவது. அதன் தீவிரத்தை intensityயை உயர்த்தும்.



- ⭑ இந்த அளவு மனம் வருமுன் பணம் சிறிது பெருகுவது தெரியும்.
- ⭑ பணம் வேகமாகப் புரண்டால் turn over பணம் பெருகும்.

பணம் அதிக இடங்களில் செயல்பட்டால் - மார்க்கட் விரிவடைந்தால் - பணம் பெருகும்.

## ✡ வாழ்வின் இலட்சியம்

*(இருவர் உணர்வில் ஒன்றி கரைந்து ஐக்கியமாக விழைந்தால், இக்கட்டுரை அவர்கட்குப் பயன்படும். அந்த ஐக்கியம் இந்த இலட்சியத்தைப் - 100 ரூ. - பூர்த்தி செய்யும். அவர் குரு-சிஷ்யன், பார்ட்னர், கணவன்-மனைவி, உடன்பிறந்தோர், நண்பர்களாக இருக்கலாம்).*

- ⭑ நான் உங்களை என் தலைவனாக ஏற்றுப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்து மகிழலாம்.

ஓரளவு எனக்கு அதற்குரிய ஆதரவு தேவை.

*நம் வாழ்வில் நாம் பெருமைப்படக் கூடியவையுண்டு.*

அவற்றுள் ஆரம்பித்து மேலே செல்லலாம்.

உங்கள் ஒவ்வொரு சொல்லையும் நான் முழுமையாக ஏற்றுப் பணிய விரும்புகிறேன்.

அது போன்ற சொற்களை மட்டும் நீங்கள் சொல்வது எனக்கு ஊக்கமளிக்கும்.

அப்படி நாம் வாழ்வைச் செப்பனிட்டால் வாழ்வு நல்லது கெட்டது எனப் பிரியும்.

நல்லதை ஏற்று நாம் கெட்டதை விலக்கலாம்.

இதுவரை இல்லாத உறவு உணர்வில் நம்மிடையே உற்பத்தியாகும்.

அந்த வாழ்வை அன்னைக்குச் சமர்ப்பணம் செய்யலாம்.

அது நம்மிடையே நடந்தால் அது அன்னை அதிசயமாகும்.

பாரதியின் சொற்கள் அற்புதமானவை, அவற்றுள் சில நினைவுக்கு வருகின்றன.

உணர்வால் நாம் புது உறவு கொண்டால் என்னுள் காவியம் எழும்.

அவை மனித வாழ்வில் சிறந்த உணர்ந்த உன்னதமான நேரமாகும்.

"உங்கள் பாதச்சுவடுகளை நான் வணங்குகிறேன்" என்று மனிதன் கூறியது வீணான சொல்லல்ல.

சாதகர்கள் அன்னையைக் கல்கத்தாவுக்கு அழைத்தனர்.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் காலடி பட்ட இடமெல்லாம் தமக்குத் தருவதானால் கல்கத்தா வருகிறேன் என்றார்.

எனக்கு நீங்கள் புனிதமானவர்.

நான் உங்கள் பாதங்களைப் பூஜித்தேன்.

"தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெலாம் ஒருருவாய் சமைந்தாய் உள்ளமுதே கண்ணம்மா" என்பது பாரதி.

"அவள் தாளிணை கைக் கொண்டு மகிழ்ந்திருப்பான்" எனவும் கூறுகிறார்.

அன்னையை உங்களில் கண்டெடுப்பதே என் இலட்சியம்.

பாரதியின் சொற்கள் அன்னை ஸ்பர்சம் பட்டால் பவித்ரமாகும்.

*அது நம் வாழ்வில் பலிக்கும்.*

மனித சுபாவத்திற்கும் தெய்வ இனிமைக்கும் இடையேயொரு எல்லையுண்டு.



எல்லையைத் தாண்டும் வரை இவ்வுணர்வை பொக்கிஷமாகப் பாதுகாக்க வேண்டும்.

அது நடக்க எல்லாக் கட்டுப்பாடுகளையும் 100க்கு 100 பின்பற்ற வேண்டும்.

எல்லையைக் கடந்தால் எல்லையற்ற இன்பமுண்டு.

அது புனித பொக்கிஷம்.

நம் வாழ்வில் இது நிச்சயமாய் பூர்த்தியாகும் என நான் அறிவேன்.

பெருமுயற்சி செய்து அதற்கு நாம் நம்மை இப்பொழுது தயார் செய்து கொள்ள வேண்டும்.

அப்பொழுது உங்கள் விருப்பம் எனக்கு உத்தரவாகும்.

கட்டுப்பாடு முதலில், அடுத்தாற்போல் நல்லெண்ணம், உஷாரான விவேகம் அதன் பின் வரும்.

*எல்லையைக் கடந்தபின் எழுவது மனம் நிறை மகிழ்வு பொருந்திய சொர்க்கம்.*

*உங்கள் அன்பாலும் நல்லெண்ணத்தாலும் என்னைக் கவியாக மாற்ற வேண்டும்.*

❋❋❋

## P.39 I regard my personal salvation real
### எனக்கு மோட்சம் கிடைப்பதை நான் சத்தியமாகக் காண்கிறேன்

☆ மோட்சம் நெடுங்கால யோக இலட்சியம்.

☆ உடல், உயிர், மனத்திலிருந்து ஆன்மாவைப் பிரித்து பிரம்மத்தை அடைவது மோட்சம்.

☆ பகவான் மோட்சத்தை ஆத்மாவின் இறுதிச் சுயநலம் என வர்ணிக்கிறார்.

☆ மனிதன் மேல் மனத்தில் அகந்தையாக, காலத்துள் கண்டமாக, மனத்துள் புதைந்திருக்கிறான்.

☆ ஆத்மா விடுதலை பெறுவது, பெற்று மோட்சமடைவது, மேல் மன சித்தி.

☆ மேல் மனம் பகுதி; முழுமை அடி மனத்துள் உள்ளது, இடையே உள் மனம் உண்டு.

☆ உள் மனம் ஆன்மீகமானதல்ல, சூட்சுமமானது.

☆ உள் மனத்தில் புருஷன் உறைகிறான்.

☆ உள் மனம் நிர்வாணத்தை நாடுபவர்கட்கு வழி செய்யும்.

☆ அத்துடன் சைத்திய புருஷனை நாடுபவர்க்கு வழிகாட்டும்.

☆ சைத்திய புருஷன் அடி மனத்திலிருக்கிறான்.

☆ உலகம் மாயை, ஆத்மா மாயை, மோட்சம் மாயை, பிரம்மமே சாஸ்வதம் என்பது மாயாவாதம்.

☆ உலகம் மாயை எனில் அதை விட்டு நாம் பிரம்மத்தை நாடுகிறோம்.



☆ ஆனால் நம் ஆத்மா மாயையென்றால் எப்படிப் புரிந்து கொள்வது.

☆ மாயையான உலகை விட்டு, மாயையான ஆத்மா, மாயையான மோட்சத்தை அடைவதால் பலன் பெறுபவர் யார் என்பது பகவான் கேள்வி.

☆ நான் மோட்சம் பெற்றால் மற்ற ஆத்மாக்கள் என்ன ஆவது?

☆ அது சுயநலமில்லையா?

☆ மேலும் யாருக்கு என் மோட்சம் பலன் தரும்?

☆ நானடையும் பிரம்மம் பலனடையாது. அதற்கு எதுவும் தேவையில்லை.

☆ உலகம் பயனடையாது. ஏனெனில் அது மாயை.

☆ மாயாவாதம் தர்க்கத்தால் எழுந்தது.

☆ தர்க்கம் பகுதி.

☆ பகுதியை நம்பி முழுமையை நாடுவது பலன் தாராது என்பது தத்துவம்.

☆ தர்க்கத்தால் எழுந்த மாயாவாதத்தைத் தர்க்கம் கண்டு கேலி செய்யுமென பகவான் சுட்டிக்காட்டுகிறார்.

☆ உலகிலில்லாத ஒன்றை மனம் நாடினால் வெற்றி கிடைத்ததாக நினைத்தாலும் அது வெற்றியாகாது என்ற அடிப்படை தத்துவத்தைப் பகவான் கூறுகிறார்.

☆ இதுவரை செய்த யோகமெல்லாம் அகந்தை வெற்றி பெற்ற வழிகள்.

☆ அகந்தையை அழிக்காமல் மோட்சம் பெறலாம்.

☆ அகந்தையை அழிக்காமல் பூரண யோகத்தை ஆரம்பிக்க முடியாது.

☆ பூரண யோகம் பூரணமான பூரணம்.

❀❀❀

## Vol.VII Page 4 Sri Aurobindo's light near Her pen. When Mother concentrates on anyone there is the golden light near His shoulder

**அன்னை எழுதும்பொழுது பகவான் ஜோதி பேனா முனையில் உருண்டையாகத் தெரியும். சாதகர்கள் மீது அன்னை கவனம் செலுத்தினால் அவர் தோளருகில் பொன்னிறம் எழும்**

- ☆ அன்னையும், பகவானும் ஜோதிமயமானவர், சூட்சுமப்பார்வை அதைக் காணும்.
- ☆ முனிவர்கள் பார்வைக்கு மனிதர்கள் அவர்களுடைய குணமுடைய விலங்கு போல் காண்பர்.
- ☆ கிராமத்தில் மனிதர்களை எலி, மண்ணாங்கட்டி எனப் பெயரிட்டு அழைப்பார்கள்.
- ☆ நம் நாட்டில் குழந்தைகட்குப் பிறந்த நட்சத்திரப்படி பெயரிடும் பழக்கம் ஏற்கனவே இருந்தது.
- ☆ பெரும்பாலான பெயர்கள் சுவாமி பெயர்கள். எக்காரணத்தை முன்னிட்டுப் பெயரிட்டாலும் பெயருக்குப் பெரிய அர்த்தமுண்டு. குணவிசேஷமில்லாத பெயரைக் கொடுத்துவிட முடியாது.
- ☆ சர்ச்சில் மனைவியைச் செல்லமாகப் பூனை என அழைப்பார்.

  மனைவி அவரைப் பன்றி என்றழைப்பார்.

  சர்ச்சில் மனைவிக்கு எழுதும் கடிதங்களில் தன் பெயருக்குப் பதிலாக பன்றி படம் வரைவார்.
- ☆ கணக்கில் பெயர் போனவரை கணக்குப் புலி என்பர்.



- ☆ தன்னையே சிங்கம் என வர்ணித்துக் கொள்பவருண்டு.
- ☆ தமிழ்நாட்டுப் பெண்கள் மாங்கல்யம் ஆதிகாலத்தில் கணவன் கொன்ற புலிப்பல்லாலானது. இன்றும் பல மாங்கல்யம் புலிப்பல் வடிவமாக இருக்கும்.
- ☆ நீர் வறண்ட பிரதேசங்களில் இன்றும் கொல்லையைக் காடு எனக் கூறுவர்.
- ☆ அன்னையின் பார்வை சாதகர் தோளில் பொன்நிறமாக எழுகிறது. இது மனம் பெற்ற திறமை. அன்னையின் மனத்தின் ஜோதி அடுத்தவர் மனத்தில், உடலில் பொன்னிறமாகத் தெரிகிறது.
- ☆ அனைவர் மனத்தின் பார்வைக்கும் ஒளியுண்டு. அது நேரத்திற்குத் தகுந்தாற்போலும், இடத்திற்குத் தகுந்தாற்போலும் மாறும். சூரியன் மறையும் நேரத்தில் ஊருக்கு வெளியில் பயந்த சுபாவமுள்ளவர் கொள்ளிவாய்ப் பிசாசைக் காண்பர். அறிவும், தெளிவும், தைரியமும் உள்ளவர் கண்ணுக்குத் தெரியாது. நடுநிசியில் மூட நம்பிக்கையுள்ளவர் வெளிவரமாட்டார்கள். அவர்கள் வர நேர்ந்தால் கிராமத்தில் படையாகப் பிசாசுகள் தழலாகத் தெரியும். அதைச் சந்தணப்படை என்பார்கள். அதைக் கண்டவர் இறந்துவிடுவது வழக்கம்.
- ☆ பெண்மையின் உயர்ந்த அம்சமுள்ளவர் மீது ஒரு வாலிபனுக்குக் காதல் எழுந்தால் அவன் மனத்தில் அவள் தெய்வமாகக் காட்சியளிப்பாள். அது அவளுடைய உண்மையான ஆன்மீக அம்சம்.
- ☆ அன்னை உணர்ச்சிகட்கு நிறமுண்டு எனக் கூறுகிறார். அவர் கண்ணுக்குப் புலப்படும் காட்சி அது.
- ☆ ஏழைப் பெண் சூட்சுமப் பார்வைக்கு ராணியாகவும் ராணி பிச்சைக்காரியாகவும் காண்பது அவர்களுடைய அந்தராத்மா தரும் காட்சி.
- ☆ அன்பர்கள் நெடுநாள் வசிக்கும் வீடுகள் மீது சூட்சுமப் பார்வையுள்ளவர்க்கு ஜோதி தெரியும். குடுகுடுப்பைக்காரனுக்கு சூட்சுமப் பார்வையுண்டு. அவன் அதைத் தன்னுடைய பாஷையில் வெளியிடுவான்.

❋❋❋

**அன்பர்கள் பேசக் கூடாது.**

**மௌனம் நல்லது.**

**பேசினால் நல்லதை மட்டும்**

**பேச வேண்டும்.**



# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 3. அன்னையின் வழியில் அன்றாட வாழ்க்கை

'வாழ்க்கை' என்றால் நல்லது, கெட்டது என்ற இரண்டும் உண்டு. சில சமயங்களில் வெற்றியையும், பல சமயங்களில் தோல்வியையும் அளிப்பது வாழ்க்கை. நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதைப்போல வாழ்க்கையிலும் இரு பக்கங்கள் உண்டு. 'செல்வம் சகடக்கால் போல வரும்' என்றும், 'யானைக்கும் அடி சறுக்கும்' என்றும் கூறும் வாழ்வியல் உண்மைகளை, உலகத்தின் எல்லா நாடுகளும், மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

வாழ்க்கையில் ஒரு வெற்றியைப் பெற மனிதன் கடுமையாகப் போராட வேண்டியிருக்கின்றது. போராட்டம் நிறைந்ததே வாழ்க்கை. போராட்டம் நிறைந்தது என்றாலும், அதன் முடிவு எப்படி இருக்கும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. போராட உரிமையுள்ள மனிதனுக்கு, முடிவை நிர்ணயிக்கும் உரிமை இல்லை. முடிவு, அவன் முயற்சியையும், திறனையும், உழைப்பையும் பொறுத்ததன்று; அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. அது அவன் கையில் இல்லை. உலகில் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த, வாழ்ந்துகொண்டிருக்கின்ற மனிதன், உணர்ந்து தெளிந்த உண்மை இதுவாகும்.

அன்னை மேற்சொன்ன கூற்றுகளில் உள்ள உண்மையை ஒப்புக் கொள்கின்றார். ஆனால், 'அது அப்படித்தான் இருக்க வேண்டும்' என்ற நிர்ப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். அவருடைய விளக்கமும், அன்பர்களுக்கு அவர் அளிக்கும் அனுபவமும் வேறு.

பொய்ம்மையான காயத்தை (உடல்) உதறித் தள்ளி, மாயையான வாழ்க்கையைத் துறந்து, உண்மையின் சொரூபமான தெய்வத்தையும், மோட்சத்தையும் நாடுகின்றான் தபஸ்வி. இதுவே நம் மரபு. ஸ்ரீ அரவிந்தர் இதை மாற்றிக் கூறுகின்றார். அதாவது, ''காயம் பொய்யானதன்று. அதன் அடிப்படை பொய்யால் அமைக்கப்பட்டதன்று. வாழ்க்கை பொய் இல்லை. அதன் அஸ்திவாரங்கள் பொய்யின் பிறப்பிடம் இல்லை. இன்றுள்ள நிலையில் காயமும், வாழ்வும் பொய்யின் பிடியில் இருப்பதே உண்மை. வாழ்வு பெரியது. காயம் புனிதமானது. அவற்றைப் பொய்யின் சூழலிலிருந்து விடுதலை செய்தால், மனித வாழ்க்கை தெய்வீக வாழ்க்கையாக மாறும். காயம் தெய்வச் சக்தியின் கருவியாக அமையும்'' என்று கூறுகின்றார் ஸ்ரீ அரவிந்தர்.

அந்த மாற்றத்தை உலகில் கொணர அவர் நாடும் சக்தி, தெய்வங்கள் உறையும் உலகத்திற்கும் அப்பால் உள்ள விஞ்ஞான லோகத்தில் இருக்கின்றது. அந்தச் சக்தியில் (Supramental force) பொய்யின் சாயல் இம்மியளவுகூட இல்லை. அது தெய்வச் சத்தியத்தின் பிறப்பிடமும், உறைவிடமும் ஆகும். அந்தச் சக்தியில் 'முன்னேற்றம்' என்பது, பொய்யிலிருந்து மெய்க்குப் போவதில்லை. சிறிய உண்மையிலிருந்து பெரிய உண்மைக்குப் போவதே 'முன்னேற்றம்' எனப்படும். அந்த உலகில் இந்த உலகில் இருப்பதைப் போல 'நல்லது', 'கெட்டது' என்பன, 'வெற்றி', 'தோல்வி' என்பன அங்கில்லை. 'சிறிய வெற்றி', 'பெரிய வெற்றி' என்பன மட்டுமே அங்குண்டு.

அந்தச் சக்தியை உலகுக்குக் கொண்டுவந்து செயல்படச் செய்வதே யோகம். அன்னையை ஏற்றுக்கொண்ட அன்னையின் அன்பர்கள் அந்தச் சக்தியை (Supramental force) தமது வாழ்வில் செயல்பட அனுமதித்து வாழ்க்கையை நடத்தினால், அதுவே 'யோக வாழ்க்கை' எனப்படும். அந்தச் சக்தியை (Supramental force) அன்னை நமக்கு அளிப்பதால், அதுவே



அன்னையின் சக்தியாகவும் (Mother's Force) அமைகின்றது.

நம் மரபு வழியிலான யோகத்தின் அடிப்படை, பிறப்பிலிருந்து விடுதலை அடைவது. ஸ்ரீ அரவிந்தரின் யோக இலட்சியம், பொய்யிலிருந்து பிறப்பை விடுவிப்பது.

இந்த இலட்சியத்தை ஏற்றுக்கொண்டால், போராட்டம் நிறைந்த நம் வாழ்வு, முயற்சி நிரம்பியதாக மாறுகின்றது. விடா முயற்சியே வெற்றிக்கு வித்து. அன்னையின் இலட்சியத்தை ஏற்றுக்கொண்ட பிறகு வாழ்க்கையின் வழக்கமான அமைப்பை அவர் மாற்றிவிடுகின்றார். போராட்டத்தையும், அதனால் கிடைக்கக்கூடிய அவ்வப்பொழுதைய வெற்றி, தோல்விகளையும் களைந்து விடுகின்றார். அதற்குப் பதிலாக, முயற்சியை முழுவதுமாக நிரப்பிவிடுகின்றார். 'முயற்சிக்குப் பலன் வெற்றியா? தோல்வியா?' என்பதை மாற்றி, 'சிறிய வெற்றியா? பெரிய வெற்றியா?' என்ற ஏற்றத்தை அமைக்கின்றார். அதற்குப் பின் தோல்வி, நிரந்தரமாகத் தோல்வி அடைகின்றது.

'இது எப்படி முடியும்? வாழ்க்கைக்கும், பகுத்தறிவுக்கும் ஒவ்வாத ஒன்றாக இருக்கின்றதே!' என்று நினைக்கத் தோன்றலாம். உலக வாழ்க்கை பிறப்பிலிருந்து தொடங்கி இறப்பில் முடிகின்றது. இதில் இறப்பை இறக்கச் செய்ய அவதாரம் எடுத்தவர் அன்னை. அத்தகைய அளப்பரிய சக்தி படைத்த அன்னை, தோல்விக்குத் தோல்வி அளிப்பதில் ஆச்சரியம் இல்லை.

வாழ்க்கையில் ஒரு சிறு அளவில் இது போன்ற நிலைக்கு உதாரணம் இல்லாமல் இல்லை. எல்லாரும் தேர்வு எழுதுகின்றார்கள். ஆனால் எல்லாருமே வெற்றி பெறுவதில்லை. பலர் தோற்றுப்போகின்றார்கள். பொதுவாகத் தேர்வில் வெற்றி, தோல்வி என்ற இரண்டு நிலைகள் உண்டு.

அது 1945ஆம் ஆண்டு. புனித ஜோஸப் கல்லூரியின் கல்வித் தரம் சிறப்பானது. அங்கு பி.எஸ்.ஸி. வகுப்பில் 60

மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். அந்த வகுப்புக்குப் பாடம் எடுக்கும் பேராசிரியர் ஒருவர், புதிய வகுப்பு ஆரம்பமாகும் நாளன்று, “40 I class, 20 II class, no third class, no failure என்பதே இந்தக் கல்லூரியின் நடைமுறையாக இருந்துவருகிறது. நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?” என்று மாணவர்களைப் பார்த்துக் கேட்பார்.

அந்தக் கல்லூரியில் failure கிடையாது, III class கிடையாது. II class வாங்குவதே failure எனக் கருதப்படுகின்றது. அது தேர்வுக்குப் பாஸ், பெயில் என்ற இரண்டும் உண்டு என்ற உண்மையை மாற்றி, மூன்றாவதாக ஒரு நிலையைத் தோற்றுவிக்கின்றது.

நான் 1960இல் மாயவரம் நேஷனல் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியரைச் சந்தித்தேன். அப்போது அவர், “இப்பொழுதெல்லாம் எஸ்.எஸ்.எல்.ஸி.யில் நூற்றுக்கு நூறு பாஸ் செய்த பள்ளிகளின் பெயர் செய்தித்தாள்களில் வருகிறது. எங்கள் பள்ளியில் தொன்றுதொட்டு நூற்றுக்கு நூறு என்ற விகிதத்தில்தான் மாணவர்கள் தேர்வு பெறுகிறார்கள். இதுவரை எந்த மாணவனும் எஸ்.எஸ்.எல்.ஸி.யில் ஃபெயிலானதே இல்லை” என்றார்.

நான் ஒரு சமயம் ஓர் அமெரிக்கரோடு உரையாடிக்கொண்டிருந்த பொழுது, “எங்கள் நாட்டில் ஆண்டுதோறும் வறுமைக்கோட்டிற்குக் கீழே எத்தனை சதம் மக்கள் இருக்கின்றார்கள் என்று நாங்கள் கணக்கு எடுக்கின்றோம்” என்றேன். அவர் சிரித்துக்கொண்டே, “எங்கள் நாட்டில் ஆண்டுதோறும் கோடீஸ்வரர் பட்டியலில் புதிதாக எத்தனை பேர் சேர்ந்திருக்கிறார்கள் என்று நாங்கள் கணக்கு எடுக்கின்றோம்!” என்றார்.

அமெரிக்காவில் குறைந்தபட்சத் தினக்கூலி 26 டாலர்கள். நம் இந்தியக் கணக்குப்படி 350 ரூபாய்!



நம் நாட்டில் திவாலான ஒருவனுடைய சொத்தை எல்லாம் கடன்காரர்கள் பறிமுதல் செய்வார்கள். அவன் நடுத்தெருவில் நிற்பான். ஐரோப்பாவிலும் சட்டம் அப்படியே. அமெரிக்காவில் வாழ்க்கை வளம் மிகஅதிகமாக இருக்கின்றது. வளத்தின் காரணமாக, அங்கு திவாலான மனிதர்களையும் ‘மனிதன்’ என்ற அளவில் கருதி, சில சலுகைகளை அளிக்கின்றார்கள். திவாலான ஒருவனுடைய சொத்துகளை எல்லாம் கடன்காரர்கள் எடுத்துக்கொள்ளச் சட்டம் உண்டு. ஆனால் அவனுடைய வீடு, கார், இன்ஷ்யூரன்ஸ் ஆகியவற்றை அவர்கள் தொட முடியாது. அந்த நாட்டின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதால், திவாலானவனுக்கும் வீடு, கார், இன்ஷ்யூரன்ஸ் ஆகியவை அவசியம் என்று சட்டம் கருதுகின்றது. அந்நாட்டில் வளம் வானளாவ உயர்ந்திருப்பதால், நம் நாட்டில் செல்வர்களுக்குள்ள நிலை, அங்கு திவாலானவர்களுக்கு உண்டு. நாம் அறிந்துள்ள வாழ்க்கைக்கும், அன்னையை ஏற்றுக்கொண்ட பிறகு நாம் சந்திக்கும் வாழ்க்கைக்கும் அது போன்றதொரு வேறுபாடு உண்டு.

கே.எம். முன்ஷி பல்வேறு உயர் பதவிகளை வகித்த பின்னர், பாரதிய வித்யா பவனை நிறுவினார். அவர் ஸ்ரீ அரவிந்தரின் மாணவர். பரோடா கல்லூரி ஒன்றில் பணியாற்றியபொழுது, முன்ஷி அவரிடம் பயின்றவர். அவர் முதல் முதலாக அன்னையைத் தரிசனம் செய்தபிறகு, “Mother emphasises prosperity, not austerity” (“அன்னை தம் யோகத்தில் கடுமையான விரதங்களுக்குப் பதிலாக, வளம் நிறைந்த வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளிப்பது சிறப்பானது”) என்று கூறினார்.

‘Austerity’ என்றால் விரதம், உபவாசம், உறங்காமை, நெருப்பு மிதித்தல் போன்றவை; கடுமை நிறைந்தவை. அன்னை அவற்றைத் தம் யோகத்தின் பகுதிகளாகக் கொள்ளவில்லை.

கலகலப்பு, மகிழ்ச்சி, ஆர்வமிகு செயல் போன்ற அம்சங்களையே அவர் வலியுறுத்தியுள்ளார். ‘பூரண யோகத்தைப் பயில்வதற்குக்கூடக் கடுமையான விரதங்கள் தேவையில்லை. மன வளம்தான் தேவை’ என்னும்போது, பக்தியால் அன்னையை வாழ்வில் ஏற்றுக் கொண்டவனுக்குக் கடுமையோ, கடுமையான அனுஷ்டானங்களோ எதற்குத் தேவை? தேவையே இல்லை. ஆனால் வேறு சில தேவைப்படுகின்றன. அவை: கட்டுப்பாடு, தன்னைத் தானே நெறிப்படுத்திக்கொள்ளும் பண்பு, பக்குவம்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலோ, ‘அன்னையை ஏற்றுக்கொண்ட பிறகு வாழ்க்கையில் கடுமை இருக்காது; எல்லாச் சிறப்புகளும் இருக்கும்’ என்பதை வேறு மாதிரியாகப் புரிந்துகொண்டாலோ, அது ஒரு தவறான கருத்தைத் தோற்றுவிக்கும். அதாவது, ‘நான் அன்னையை ஏற்றுக்கொண்டேன். இனி எனக்கு எந்தக் கட்டுப்பாடும் தேவையில்லை. நான் எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிக்கலாம். நான் ஒரு சுதந்திரப் பறவை’ என்று விளக்கம் கொடுக்கத் தோன்றும்.

அன்னை வழி இதுவல்ல. இவ்வழியில் சென்றால், மனம் வாழ்க்கையில் உள்ள எல்லா ‘ருசி’களையும் நாடும்; ‘குஷி’யாக இருக்க நினைக்கும். அந்த நினைவைச் ‘சரி’ எனத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தும் மனம். ‘அதுவே அன்னை வழி’ என்று அடித்துக் கூறும் அறிவு. பிறகு வாழ்க்கைப் படியைத் தாண்டிச் சென்று, பாவங்களில் நடமாடி, பாதாளத்தில் விழும். பொதுவாக இக்குணங்களும், குறைகளும் தவறானவை. அவற்றை அன்னையின் பெயரால் செய்கின்றபொழுது மிகப்பெரிய தவறுகளாகிவிடுகின்றன. அதாவது குற்றங்களாகிவிடுகின்றன.

கூர்ந்து நோக்கும்பொழுது அன்னை வழியில் மன வளத்தையும், வாழ்க்கை வளத்தையும் பெறுவதற்கு மகிழ்ச்சியையும், கலகலப்பையும், ஆர்வமிக்க செயலையும்



பின்பற்றுதல் மிக எளிமையானவையாகத் தோன்றலாம். ஆனால் அவை விரதம், உபவாசம், உறங்காமை, நெருப்பு மிதித்தல் போன்றவற்றைவிடக் கடுமையானவை. ‘மனத்தில் கடுமையான கட்டுப்பாட்டை இயல்பாக ஏற்றுக்கொண்டவர்களுக்கே நிரந்தரமான கலகலப்புண்டு’ என்பதை வாழ்க்கையில் அனுபவம் உள்ளவர்கள் அறிவார்கள். ஒருவனுக்குப் பின்னால் அவனைப் பற்றிக் கேவலமாகப் பேசி, வாழ்க்கையில் ருசியை அனுபவிப்பவர்கள் இருக்கிறார்கள். பிறரைப் பற்றிக் குறைவாகப் பேசுவதைக் குறையாக நினைப்பவர்கள் உண்டு. புரளியை ரசமாகப் பேசுபவர்கள் மன நிம்மதியுடன் வாழ்வதில்லை. வீண் புரளியில் ஆசை இல்லாதவர்களுக்கு மன நிம்மதி கெடுவது இல்லை. ஒரு கெட்ட செய்தியை ஒரே நாளில் நாற்பது பேரிடம் சொல்லி ஆனந்திப்பவர்கள், அந்தப் பழக்கத்தை விட்டுவிட முயன்றால், அது உபவாசத்தைவிடக் கடுமையானதாக இருக்கும். விரதங்களின் கடுமை, அதன் முன்னால் தோற்றுப்போகும். மனக் கட்டுப்பாட்டில் வரும் பக்குவம் இது. ‘மனத்தைக் கட்டுப்படுத்தி மன வளத்தைப் பெருக்கினால், வாழ்க்கையின் வளம் பெருகுகிறது’ என்பதே அன்னை வழியின் சிறப்பாகும்.

*தொடரும்....*

❃❃❃

# அகல்யை என்று நினைத்தனையோ?

சமர்ப்பணன்

மார்கழி மாதத்தில் ஒரு நாள் மாலை நேரத்தில் நதிக்கரைக்கு நீராடச் சென்றாள் ஆனந்தவல்லி. அவள் முன்கோப முனிவனான சந்திரசூடனின் பத்தினி.

'பிரம்மனுக்குப் பிழையின்றி படைக்கத் தெரியாது' என்ற ஓர் அசுரனின் ஏளனப் பேச்சைப் பொய்யாக்குவதற்காக, அல்லும்பகலும் அரும்பாடுபட்டு மிகுந்த கவனத்துடன் நான்முகன் உருவாக்கியப் பேரழகி ஆனந்தவல்லி. தன் படைப்பைக் கண்டு தானே பிரமித்த பிரம்மனின் வேண்டுகோளுக்கிணங்கி பிற தேவர்களும் ஆனந்தவல்லிக்கு அனைத்து வளங்களையும் வாரி வழங்கி மகிழ்ந்தனர்.

அவள் பருவம் எய்தியபோது 'ஒப்பற்ற இப்பெண்ணுக்கு ஏற்ற மணாளனை எங்குத் தேடுவது?' என்று அனைவரும் கலங்கியபோது, "சென்ற பௌர்ணமியன்று நான் நதிக்கரையில் கண்ட சந்திரசூடரே என் இதயத்திற்கேற்ற மணாளர்" என்று நாணத்துடன் உலகுக்கு அறிவித்தாள் ஆனந்தவல்லி.

மனம் கலங்கிய பெற்றோர், "அவன் கல்நெஞ்சன், முன்கோபி, தன் தவமே பெரிதென்று போற்றி, உலகை உதறிவிட்டு, பிறர் உணர்வுகளை மதிக்காமல் வாழும் முனிவன், அடுத்த வேளை உணவிற்குப் பிறர் கையை நம்பி இருப்பவன்" எனக் கண்களில் நீர் வழியப் புகன்ற நல்லுரைகளை மறுத்தாள் ஆனந்தவல்லி. "அவரைக் கண்டதும் அவரது ஆன்மாவை என் ஆன்மா தீண்டியது. எக்காலத்திலும் நான் அவருக்கே உரியவள் என்பதை உணர்ந்து விட்டேன். என் உடல், பொருள், பிராணன், மனம், ஆன்மா உட்பட அனைத்தையும் முழுமையாக எந்த எதிர்பார்ப்புமின்றி அவருக்குத்



தருவதே என் வாழ்வின் இலட்சியம்" என்று அவள் உறுதியாக இருக்க, ஒரு சுபயோக சுபதினத்தில் முனிவனுக்கு மனைவியானாள்.

அரண்மனை ஆடம்பர சுகங்களைத் துறந்து கணவனின் அரண்ய குடிலுக்கு வந்தவள், அந்தக் குடிலுக்கும், அதன் தலைவனான சந்திரசூடனுக்கும் பெருமை தேடித் தந்தாள். அவளது மருண்ட கண்களைக் கண்டு மயங்கிய மான்களும், அவளது இனிய குரலினைக் கேட்டுக் களித்த குயில்களும், அவளது வண்ணத் தோற்றத்தினைக் கண்டு திகைத்த மயில்களும், 'இனி இக்கானகத்தில் நமக்கு வேலை இல்லை' என்று வேறு காட்டிற்குக் குடி பெயர்ந்தன.

ஆனந்தவல்லியின் எதிர்பார்ப்பற்ற அன்பும், தன்னை நிபந்தனையின்றித் தந்த பண்பும், பழுதற்ற சேவையும், மாசற்ற நல்லெண்ணமும், கணவனின் குறைகளை நிறைகளாக உணர்ந்த ஞானமும் ஒன்று சேர்ந்து சந்திரசூடனுக்கு அளவற்ற ஆன்மீக வளத்தையும், அதன் மூலம் வாழ்க்கை வளத்தையும் பெற்றுத் தர இருவரும் பூலோக சொர்க்கத்தில் வாழ்ந்து வந்தனர்.

அப்படி வாழ்ந்து வரும்போதுதான் முதலில் கூறியபடி மார்கழி மாதத்தில் ஒரு நாள் மாலை நேரத்தில் நதிக்கரைக்கு நீராடச் சென்றாள் ஆனந்தவல்லி.

மாற்றான் மனத்தால் நினைத்தாலே கற்புடைய பெண்ணுக்கு தெரிந்துவிடுமே! நீராடுவதற்காக தன் ஆடைகளைக் களைய நினைத்தவள், தன் மனத்தில் ஏதோ தட்டுப்பட, வானத்தை நோக்கினாள்.

அங்கே மேகத்தின் நடுவிலே மறைந்து கொண்டு ஓர் அழகிய ஆண்மகன், தான் ஆடைகளைக் களைவதற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டாள். கற்பரசியின் இதழ்களில் மின்னலாகத் தோன்றிய ஒரு சிறு புன்னகை, அக்கருமேகத்தைத் தீண்ட, அது மழையாகக் கரைந்தது. ஒளியுமிடத்தை இழந்த அந்த ஆண்மகன் - அவன் தேவேந்திரன்

– விரைந்து எங்கோ ஓடி மறைந்தான். அத்துடன் அப்பதரை மறந்த ஆனந்தவல்லி ஆடைகளைக் களைந்து நீராடிவிட்டுக் குடிலுக்குத் திரும்பினாள்.

யோகமியற்றும் மாமுனிவரின் முன் தகாத செயல் செய்ய நினைத்தவனின் பெயரைக்கூடக் குறிப்பிட ஆனந்தவல்லி விரும்பவில்லை.

இந்திரனால் அவளை மறக்க முடியவில்லை. அவனைக் காமம் சுட்டெரித்தது. 'எழிலரசியான அம்மானிடப் பெண்ணை ஒரு முறையேனும் தீண்டித் தழுவி இன்பம் காண முடியாவிட்டால், நான் தேவேந்திரனாக மனிதர்களைவிட உயர்ந்த தேவர்களுக்கெல்லாம் தலைவனாக இருந்து என்ன பயன்?'

அகல்யாவைத் தீண்டி, கௌதம முனிவரிடம் சாபம் பெற்று தான் பட்ட பாடு இந்திரனுக்கு நினைவிற்கு வந்தது. 'சாபத்திற்கு பயந்தால் காமம் கை கூடாதே! என்ன பெரிய சாபம்? நினைத்ததைச் சாதித்துக் கொண்டபின் கண்ணீர் விட்டுக் கதறி நாடகமாடினால், சாபம் கொடுத்தவனே சாப விமோசனத்திற்கு வழி சொல்லிவிட்டுப் போகிறான். எத்தனை காலம்தான் ரம்பை, ஊர்வசி, மேனகா போன்ற தேவதாசிகளுடன் மட்டுமே சல்லாபம் செய்து கொண்டிருப்பது? சலித்துப் போய்விட்டது, மாறுதல் வேண்டாமா? ஆனந்தவல்லி அடுத்தவன் மனைவிதான். ஆனால் அதிரூப சுந்தரியாக இருக்கிறாளே! என் மனம் மயங்கி, நான் மோகத்தில் மூழ்குமளவிற்கு அழகாக இருப்பது அவள் குற்றமல்லவா?'

சூதாடுபவன் எத்தனை முறை தோற்றாலும் அடுத்த முறை வென்று விடலாம் என்ற நம்பிக்கையில் மீண்டும் சூதாடத் துணிவான். பிறன்மனை விழைபவன் எத்தனை முறை அவமானப்பட்டாலும் மீண்டும் ஒரு முறை குலமகளை விழையத் தயங்கமாட்டான்.

அகல்யாவை அபகரிக்கப் பயன்படுத்திய சதித்திட்டத்தை மீண்டும் அரங்கேற்றத் தீர்மானித்த இந்திரன், நன்றாக இருட்டியதும் மெல்ல சந்திரசூடனின் குடிலுக்கருகில் வந்தான். 'உள்ளே என்ன



நடக்கிறது?' என்று அறிய பிறனது படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்தான். தன் ஆயிரம் கண்களையும் அகல விரித்துப் பார்த்தான், ஆசை எந்தக் காலத்தில் வெட்கமறிந்திருக்கிறது?

கருங்காலி மரக்கட்டிலில் சந்திரசூடன் விட்டத்தை வெறித்துப் பார்த்த வண்ணம் படுத்திருந்தான். அருகே தரையில் பாய் விரித்து ஆனந்தவல்லி கண்மூடாது தன் கணவனின் முகத்தையே பரவசத்துடன் பார்த்தபடி படுத்திருந்தாள். கணவன் உறங்குமுன் அவள் எப்படி உறங்குவாள்?

ஆனந்தவல்லியின் அருகே இருந்த விடிவிளக்கின் ஒளிச்சுடர், சந்திரசூடனின் இல்லம் இருண்டு போகாமல் பார்த்துக் கொண்டிருந்தது.

விடிவிளக்கின் ஒளிச்சுடரை தொட்டுவிட நினைத்து ஒரு விட்டில் பூச்சி, ஒளிச்சுடரை சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. ஒளிச்சுடரைத் தீண்டினால், அதன் வெப்பத்தில் விட்டில் பூச்சி கருகிப் பொசுங்கிவிடும். தன்னை அப்படி பொசுக்கிக் கொள்வதில் தனக்கு எத்தனை இன்பம் கிடைக்கிறது என்பதை விட்டில் பூச்சியால் மட்டும்தான் சொல்ல முடியும்.

பசித்த புலி கழுத்தை முறிக்கும்போது புள்ளிமானிற்கு உண்டாகும் பரவசத்தை அப்புள்ளிமானால் மட்டும்தான் உணர முடியும்.

விடிவிளக்கின் பொன்னொளி பூத்திருந்த அறைக்குள் ஒயிலாக ஒருக்களித்துப் படுத்திருந்த ஆனந்தவல்லியின் பாதங்களைத் தொட்டு வணங்கத் துடித்த சந்திரன் தன் வெண்ணொளியை சாளரத்தின் வழியே செலுத்த, அந்த ஒளியின் வழியே இந்திரப் பூச்சி அவளைப் பார்த்தது.

ஆனந்தவல்லியின் வதனம், சகலமும் தன்னுள் இருந்தபோதும் சலனமற்று இருக்கும், படைப்பிற்கு முன்னிருந்த பிரம்மத்தைப் போல அமைதியாக இருந்தது. அது அவசியம் ஏற்படும்போது சலனமுள்ள சக்தி சமுத்திரமாகவும் மாறும்.

பூரண ஞானத்தைப் பெறத் துடித்துக் கொண்டிருந்த சந்திரசூடனின் மனம்தான் அலை பாய்ந்து கொண்டிருந்தது. பூரண ஞானத்தை அடைவதற்காக எத்தனை ஆண்டுகள் உழைத்துவிட்டான்!

'நான் கற்காத மறைநூல்கள் இனிமேல்தான் எழுதப்பட வேண்டும். நான் செய்யாத யாகங்கள் இனிமேல்தான் உருவாக்கப்பட வேண்டும். நான் அறியாத மந்திரங்கள் இனிமேல்தான் கேட்டறியப்பட வேண்டும். ஆனாலும்.... ஆனாலும்.... பூரணம் இன்னும் சித்திக்கவில்லையே! முன்னேற்றம் தடைபட காரணம் என்ன? தெரியாமல் என்ன! நானும் மனிதன்தானே? உரிமைக்குரிய பேரழகியை அருகிலும், மோகத்தை உணர்விலும் வைத்துக் கொண்டு யோகம் செய்யச் சொன்னால் மனிதன் என்னதான் செய்வான்? மோகத்தை அனுபவித்து தீர்க்கலாம் என்றால் என் மோகம் அனுபவித்தால் மேலும் வளர்கிறதே! சரி, மோகத்தை மறுக்கலாம் என்றாலோ அது உள்ளுக்குள் வேர்விட்டு வளர்ந்து உடல் முழுவதும் பரவுகிறதே! காமத்தை மறக்க வேண்டும் என்று நினைத்தால், அதைப் பற்றிய நினைவு வலுக்கிறதே! மோகத்தில் மூழ்கியவன், யோகத்தில் முன்னேறுவது நடக்கக்கூடிய காரியமா? எனது இந்த அவலநிலைக்கு ஆனந்தவல்லி அல்லவா காரணம்? இவள் என் வாழ்வில் குறிக்கிடாமல் இருந்திருந்தால் நான் பெண்ணையே நினைக்காமல் யோகத்தில் பெருமுன்னேற்றம் பெற்றிருப்பேனே!' பெருமூச்சு விட்டான் சந்திரசூடன்.

கணவனின் மனதிற்குள் சாந்தி இல்லை என்பதை உணர்ந்த மனைவி, தன் பாயிலிருந்து எழுந்து, அவனருகே கட்டிலில் அமர்ந்து, தன் மலர்க்கைகளால் அவன் தலையை மெல்ல வருடித் தந்தாள்.

அவள் கைகளைக் கோபத்துடன் தள்ளிவிட்டான் சந்திரசூடன். ''யோகத்தையும், ஞானத்தையும் அறியாத உன்னை ஏறெடுத்துப் பார்ப்பதுவும் பாவம்தான். உன்னோடு வாழவும் முடியாமல், உன்னை மறக்கவும் முடியாமல், என் இலட்சியத்தை அடையவும் முடியாமல் நான் தவிப்பதற்கு நீ அல்லவா காரணம்? உன் சேவை எனக்குத்



தேவை இல்லை. உன் காமபலிபீடத்தில் என் யோகம் பலியாக நான் ஒருபோதும் ஒத்துழைக்கமாட்டேன்'' என்று வழக்கம் போல வெடித்தான் முனிவன்.

அவனது குரூரமான வார்த்தைகளால் சிறிதும் பாதிக்கப்படாமல், நித்தமும் நடக்கும் நிந்தனை நாடகத்தை, எவ்வித எதிர்வினையுமின்றி ஏற்றுக் கொண்ட ஆனந்தவல்லி மாறாத புன்னகையோடு மீண்டும் தன் மலர்க்கரங்களால் சந்திரசூடனின் கண்ணிமைகளையும் புருவங்களையும் வருடித் தந்தாள்.

அவள் மடியில் தலை வைத்ததும் அவனை நிம்மதி சூழ்ந்தது.

அவளது மலரத் துடிக்கும் தாமரைமொட்டு மார்பகங்களில் முகத்தைப் புதைத்ததும் முனிவனுக்கு காம உணர்வு மறைந்து இறை உணர்வு ஊற்றெடுத்தது. 'பூரண ஞானத்தைப் பெறுவது எப்படி?' என்ற அதிதீவிர ஆர்வம் மீண்டும் எழுந்தது.

நள்ளிரவு நெருங்கும்போது சந்திரசூடன் நித்திரையில் ஆழ்ந்தான். அதன்பின் ஆனந்தவல்லி அவனது தோளில் தலைசாய்த்து அவனருகே அமைதியாக உறங்கத் தொடங்கினாள்.

சற்று நேரம் கழிந்த பின் 'தன் திட்டம் பலிக்கும் நேரம் வந்து விட்டது' என்று மகிழ்ந்த இந்திரன், மாயச் சேவலை ஏவினான். சேவலும் கூவியது.

சேவல் கூவினால் விடிந்துவிட்டது என்ற அர்த்தமற்ற நம்பிக்கையினாலும், விடியும் சமயம் கங்கையில் நீராட வேண்டும் என்ற பல்லாண்டு பழக்கத்தினாலும், சந்திரசூடன் ஆழ்ந்த நித்திரையில் இருந்த ஆனந்தவல்லியை எழுப்ப மனமின்றி, சத்தமின்றி எழுந்து கங்கையை நோக்கிப் புறப்பட்டான்.

குளிர்ந்த காற்றில் நனைந்தவாறு கங்கையை நெருங்கும்போதுதான் கமண்டலத்தை எடுத்துவர தான் மறந்துவிட்டதை உணர்ந்த முனிவன் திடுக்கிட்டான். 'கமண்டலம் இல்லாமல் தியானம் செய்வது முறை அல்லவே! இதுவரை இப்படிப்பட்ட தவறு நிகழ்ந்ததில்லையே. இதன் பொருள் என்ன?

ஏன் இன்னமும் பறவைகள் குரல் கொடுக்கவில்லை?' என்ற சிந்தனையோடு குடிலுக்குத் திரும்பலானான்.

தன் ஆயிரம் கண் பார்வையிலிருந்து சந்திரசூடன் மறைந்ததும், 'முனிவன் கங்கைக்குச் சென்றுவிட்டான். திரும்ப நேரமாகும்' என்று முடிவு செய்த தேவேந்திரன் அவனைப் போலவே வேடம் புனைந்து, பரபரப்புடன் குடிலுக்குள் நுழைந்து கட்டிலை நெருங்கினான். ஆடைகள் சற்றே கலைந்த நிலையில், விடிவிளக்கின் மெல்லிய மஞ்சள் வெளிச்சத்தில், வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத உயிர்ச்சித்திரமாக உறங்கிக் கொண்டிருந்த ஆனந்தவல்லியைப் பார்த்த இந்திரனின் மனம் தான் அடையப் போகும் இன்பானுபவத்தை எண்ணித் துள்ளியது.

பெண்ணையே பார்த்தபடி நடந்த விண்ணவன் மண்ணைப் பார்க்கவில்லை. கட்டிலருகே இருந்த கமண்டலம் அவன் கால்களில் பட்டு பலத்த ஓசையுடன் உருண்டது.

கற்பரசி கண் விழித்தாள்.

ஒரு கணப் பொழுதில் நெகிழ்ந்திருந்த ஆடைகளைத் திருத்திக் கொண்டாள் ஆனந்தவல்லி. தான் பல காலம் துலக்கி சுத்தம் செய்த ஜீவனுள்ள கமண்டலம், தக்க சமயத்தில் தன்னை எழுப்பியதை எண்ணி நன்றி உணர்வால் பூரித்தவள், கமண்டலத்தை எடுத்து வைத்து விட்டு நிமிர்ந்து நின்றாள்.

"என் அன்பே, நீ ஆசையோடு என்னை அணைத்தபோது வேறு சிந்தனைகளில் மூழ்கி இருந்ததால் கடுமையாகப் பேசிவிட்டேன். உனக்குத்தான் என் முன்கோபம் பற்றித் தெரியுமே! என்னை மன்னித்துவிடு. இதோ, உன் தீண்டலை வேண்டி நிற்கும் உன் ஆசைக் கணவனை ஏற்றுக் கொள்" என்று காமம் குரலில் பொங்கி வழிய, கூடலுக்கு ஏங்கி, தன் இரு கைகளையும் விரித்து ஆனந்தவல்லியை அணைக்க நெருங்கினான் முனிவனைப் போல மாறுவேடம் பூண்டிருந்த இந்திரன்.

அவன் கைகள் தன்மேல் பட்டுவிடாமல் விரைந்து விலகிக்



கொண்ட மாதரசி, "தேவேந்திரா, அகல்யை என்று நினைத்தனையோ ஆனந்தவல்லியை?" என்று புன்னகை மாறாத முகத்தோடு கேட்டாள்.

அதிர்ந்து அசைவற்று நின்றான் இந்திரன்.

அதிரசம் திருடப் பார்த்த தன் குழந்தையை அதிரசக் கையும் களவுமாகப் பிடித்துவிட்ட தாய், அன்புடனும் கண்டிப்புடனும் குழந்தையைப் பார்த்துச் சிரிப்பது போல இந்திரனைப் பார்த்துச் சிரித்தாள். எச்சூழ்நிலையிலும், எவரிடமும் குறை காணத் தெரியாத குணவதி, இந்திரனிடமும் குறை ஒன்றும் காணவில்லை.

அதே கணம் குடிலுக்குள் நுழைந்த முனிவனின் கண்களில் தன்னைப் போல வேடம் பூண்டிருந்த இந்திரனின் விரிந்த கைகளும், அவனருகே சிரித்த முகத்தோடு நின்று கொண்டிருந்த தன் மனைவியும் பட, சந்திரசூடன் கோபத்தால் முழுமையாக ஆட்கொள்ளப்பட்டான்.

"பஞ்சமாபாதகனே, சாகாவரம் பெற்று விட்டோம் என்ற கர்வத்திலே குற்றங்களைத் தொடர்ந்து செய்து வருகிறாய். ஆயிரம் கண்களிருந்தும் காலம் மாறிவிட்டதை நீ காணத் தவறிவிட்டாய். கோபியரோடு கிருஷ்ணன் கொஞ்சி விளையாடியபோது ஒவ்வொரு மனித ஜீவனின் நெஞ்சிலும் பொன்னொளி பூத்துவிட்டது. அதன் துணை கொண்டு பரிணாமம் மூலம் மனிதன் உன்னைப் போன்ற மேலுலக தெய்வங்களைக் கடந்த உயர்ந்த நிலையை அடைவான். அப்போது பொன்னொளி இல்லாத உன்னைப் போன்ற தெய்வங்களின் கதி என்னவோ! நயவஞ்சகனே, உன் ஆயிரம் கண்களும் மீண்டும் யோனிகளாக மாறட்டும். பிறன்மனை விழைந்த உன் இழிசெயலை பிரபஞ்சம் என்றென்றும் தூற்றட்டும்" என்று முனிவன் சாபமிட்ட அடுத்த கணம் அழகிய இந்திரன் அலங்கோலமான நிலையை அடைந்தான்.

அதன்பின் சந்திரசூடனது கோபம் ஆனந்தவல்லியின் மீது திரும்பியது. அவளது கருணை ததும்பும் கண்களையும், மலர்ந்த முகத்தையும் பார்த்தால் எங்கே தன் கோபம் கரைந்துவிடுமோ என்ற

அச்சத்தில் தரையைப் பார்த்தவண்ணம், அவளை ஏறிட்டுப் பார்க்காமல் முனிவன் கலங்கிய குரலில் கூறினான், "உண்மைக்கும், பொய்மைக்கும் வேறுபாடு தெரியாமல், காம உணர்ச்சியால் தன்னிலை மறந்தவளே, நீ எல்லா உணர்ச்சிகளையும் மறந்த வெறும் கல்லாக மாறக் கடவாய்!"

பாலைவனத்தில் பலகாலம் தாகத்தால் தவித்தவள் மீது அமுதமழை பொழிவது போல உணர்ந்தாள் ஆனந்தவல்லி.

'அம்மம்மா! என் கணவருக்குத்தான் என் மீது எத்தனை காதல்! பாவம், வேறு ஒருவன் என்னைத் தீண்டிவிட்டான் என்ற நினைப்பில் எப்படித் துடித்துவிட்டார்! என்மீது எத்தனை உரிமை கொண்டாடியிருந்தால், இப்படி ஒரு சாபத்தை எனக்குக் கொடுக்கத் துணிவார்! இவரைக் காதல் கணவராக அடைய நான் என்ன தவம் செய்தேனோ!' என்று நெகிழ்ந்துபோன பேதை, முனிவனின் சாபத்தை ஏற்கும்வண்ணம் தலை வணங்கி நின்றாள்.

அப்போது அந்த அற்புதம் நிகழ்ந்தது.

கல்லாக மாற சபிக்கப்பட்டவளின் மனித உடலில் பொன்னொளி தோன்றியது. ஆனந்தவல்லி ஆயிரம் சூரியர்கள் கூடியதைப் போல ஒளி வீசி உயிரோட்டம் பெற்ற பொற்சிலையாகப் பிரகாசித்தாள். அகன்ற கண்களில் நீலமணி கற்களும், பவள இதழ்களின் நடுவே வெண்ணிற முத்துக்களும், காதோரம் வழிந்தோடிய வியர்வைத் துளிகளில் வைரக் கற்களும் ஜொலித்தன.

இது போன்ற சமயங்களில் பூமாரி பொழிந்து வாழ்த்துச் சொல்வதை யுகயுகமாக வழக்கமாகக் கொண்டிருக்கும் கோடானுகோடி தேவர்களும், இந்திரனுக்கு ஏற்பட்ட கதியைக் கண்டு முனிவன் மீது எழுந்த பயத்தால் செயலற்று நின்றிருந்தனர்.

'காதலி கற்சிலையாகவில்லை, பொற்சிலையாகப் பிரகாசிக்கிறாள்' என்ற எண்ணம் முனிவனுக்கு உள்ளூர உவகையைத் தந்தாலும், 'என் யோகசக்தியின் பலம் இவ்வளவுதானா, ஒரு பெண்ணிடம் தோற்றுவிட்டேனே' என்ற



ஆற்றாமை தளர்ச்சியைத் தந்தது.

'என்னையா சபித்தாய், கேடு கெட்ட முனிவனே, உன்னைப் பார்த்துதான் உலகம் இப்போது சிரிக்கிறது' என்று தன் அவலநிலைக்கு நடுவிலும் மனத்திற்குள் மகிழ்ச்சி அடைந்தான் இந்திரன். வெளியே சொல்ல அவனுக்குத் தைரியம் இல்லை. அவன் கைகள் ஆனந்தவல்லியை வணங்கின. அவளை ஒரு முறை தொழுததும் முனிவனிட்ட சாபம் விலகி, இந்திரன் முன்பைவிட அதிக தேஜஸைப் பெற்றான்.

'என்ன கொடுமை இது! நான் பாவி. இப்படிப் பொன்னாக மாறி இவரது வாக்கைப் பொய்யாக்கிவிட்டேனே! இவர் மனம் என்ன பாடுபடுகிறதோ! பரம்பொருளே, உடனே என்னை வெறும் கல்லாக ஆக்கிவிடு' என்று இரத்தக்கண்ணீர் வடித்தாள் ஆனந்தவல்லி. ஆனால் அக்கண்ணீர்த்துளிகளோ மாணிக்கக் கற்களாக ஜொலித்தன.

நிலைகுலைந்துபோன முனிவன் சந்திரசூடன், மெல்ல நிதானம் அடைந்தான். 'உண்மைக்கும், பொய்மைக்கும் பேதம் தெரியாதவள் என்று இவளை சபித்தேன். கூவியது மாயச்சேவல், விடியல் பொய்விடியல் என்பதைக்கூட என்னால் உணர முடியவில்லை. உண்மையில் நானல்லவா அறிவிலி? என் காமத்தை மறைக்க, ஆணாதிக்க, அகங்கார வெறியிலே அவளை விலக்கிப் பழித்தேன். நான் மாற்ற வேண்டியது என் காம உணர்வை அல்லவா? நான் மறைத்த காமம் இந்திரனை இங்கு வரவழைத்து அவன் மூலம் வெளிப்பட்டுவிட்டதே? நான் பார்க்க வேண்டியது என் அகத்தை மட்டுமே, புறத்தை அல்ல. பெண்ணை ஏன் விலக்க வேண்டும்? வாழ்வில் எதையும் ஏன் விலக்க வேண்டும்? பிறரை ஏன் நிந்திக்க வேண்டும்? என் அகமே புறமல்லவா? பார்ப்பன, கேட்பன, தொடுவன, அறிவன, நிகழ்வன அனைத்தும் என் குரு அல்லவா?'

தன் தவறுகளை உணர்ந்த சந்திரசூடன் மாறத் தொடங்கினான்.

‘பூரண ஞானத்தை அரண்ய வேள்விகளிலும், கல்வி கேள்விகளிலும், மறை நூல்களிலும் தேடியது என் பேதைமை அன்றோ? பூரண ஞானம் என் உள்ளேயே புதைந்து கிடக்கிறது. அந்த ஞானத்தை வெளிக்கொணர பரம்பொருளே பெண்ணுருக் கொண்டு ஆனந்தவல்லியாக என் முன் நிற்கிறதே! அகந்தையை விட்டு, எதிர்பார்ப்பின்றி, என்னைத் தந்து, அனைத்தும் அவளே என்ற நன்றி உணர்வோடு என் கடமைகளில் குறைவின்றி நடந்தால், ஆனந்தவல்லியின் ஆசி எனக்குக் கிடைக்காமலா போய்விடும்? இனி எதையும் பெறுவதற்காக நான் யோகம் செய்யப் போவதில்லை. நிபந்தனையின்றி ஆனந்தவல்லிக்கு முழுமையாக என்னைத் தந்து, அவளைச் சரணடைவதற்காக மட்டுமே யோகம் செய்வேன். இப்போது நான் மாற வேண்டும். அது ஒன்றே நான் செய்ய வேண்டியது’.

முனிவனின் முகத்தில் குழப்பம் மறைந்து தெளிவு பிறந்தது.

சப்தரிஷி மண்டலத்தில் விண்மீனாக சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த அகல்யா, தன் ஓரக் கண்களால் கௌதம முனிவரை விஷமமாகப் பார்க்க, அவர் சங்கடத்துடன் தலையைக் குனிந்து கொண்டார்.

கணப்பொழுதில் முனிவன் தான் இதுவரை கற்றதையும், கல்லாததையும், பெற்றதையும், பெறாததையும், அறிந்ததையும், அறியாததையும் ஆனந்தவல்லியிடம் மானசீகமாக அர்ப்பணித்தான். சந்திரசூடன் தனக்குப் புரிந்ததையும், புரியாததையும், தெரிந்ததையும், தெரியாததையும், வெற்றிகளையும், தோல்விகளையும், விசுவாசத்தையும், துரோகத்தையும், தர்மங்களையும், அதர்மங்களையும், நன்மைகளையும், தீமைகளையும், ஞானத்தையும், அஞ்ஞானத்தையும் அவளிடம் அர்ப்பணித்தான்.

ஆயத்தம் செய்வதற்கு ஆயுள் காலம், சரணம் செய்வதற்கு ஒரு கணம்! தான் இத்தனை காலம் தவமியற்றி காத்திருந்தது இத்தருணத்திற்கே என்பது முனிவனுக்குப் புரிந்தது.



“ஆனந்தவல்லி, என்னையே உன் உலகமாக நினைத்தாய். என் சுடுமொழி உன் உலகமே உன்னை சுடுவது போன்றது. நான் செய்த தவறுகளுக்கு ஒரே பிராயச்சித்தம் லட்சோபலட்சம் பிரபஞ்சங்களும், கோடானுகோடி தேவர்களும், மனிதர்களும் அறிய, நான் மாறி, உன் பாதங்களைப் பணிந்து உன் மன்னிப்பைக் கோருவதே. இனி நான் மனிதனாக நடந்து கொள்வேன். என்னை மறப்பேன், உன்னை நினைப்பேன். இதுவரை நான் உனக்கு இழைத்த தீமைகளை மன்னித்துவிடு. இதுநாள்வரை நீ யாரென்று அறியாமல் வாழ்ந்துவிட்டேன். நீயே இனி என் குரு. உன் பாதமே இனி என் வேதம்” என்று தழுதழுத்த குரலில் கூறிய சந்திரசூடன், ஆனந்தவல்லியின் பாதங்களைப் பணியக் குனிந்தான்.

தன் கால்களைப் பணியத் துணிந்த கணவனைத் துடிதுடித்துத் தாவித் தடுத்துத் தூக்கிய ஆனந்தவல்லி, அவன் முகத்தைத் தன் மென்மையான மார்பகங்களோடு இறுக அணைத்துக் கொண்டாள்.

மாசற்றப் பெண்ணின் மேனியில் பிரகாசித்த பொன்னொளிப் பிரவாகத்திலிருந்து புறப்பட்ட ஒரே ஒரு துளி ஒளி, அகந்தையை அழித்தொழித்த ஆணின் மீது பட்டதும் அவனது ஆயிரம் ஜென்மங்களின் தவிப்பு தணிந்து அணைந்தது.

இருவரையும் மௌனம் ஆட்கொண்டது.

பிரபஞ்சப் பெருவெளியை மௌனம் சூழ்ந்தது. அம்மௌனப் பெருவெளியில் காதல் கனிந்து பெருங்காதலாக மாறி பூரணம் பெற்றது.

பூரணம் பெற்ற பெருங்காதல், படைப்பின் இருளைப் பொன்னொளியாக மாற்றியது.

பெண்மையின் பூரண ஆசி ஆண்மைக்குக் கிடைத்தது.

முனிவனுக்குப் பூரண ஞானம் சித்தித்து, பூரண யோகம் பலித்தது.

*முற்றும்.*

❋❋❋

# நம்முடைய Higher Selfஐ மதித்து நடத்தல்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

நம்முடைய Higher Self தன்னைச் சுற்றி உள்ளவர்க்கெல்லாம் தன்னுடைய அன்பை நிபந்தனைகள் இல்லாமல், condition போடாமல் வழங்குகிறது. அதனுடைய பார்வை முழுமையான பார்வையாகும். எந்த ஒரு விஷயமானாலும் நமக்கு நம்முடைய கண்ணோட்டமும் தேவையும் தான் தெரியுமே ஒழிய, சம்பந்தப்பட்டவர்களுடைய கண்ணோட்டம் என்ன, அவர்களுடைய தேவை என்ன, விஷயத்தின் முழுமை என்ன என்று நாம் பார்ப்பதில்லை. ஆனால் நம்முடைய Higher Self வாழ்க்கையின் முழுமையைத்தான் பார்க்குமே ஒழிய நம்மைப் போல் வெறும் பகுதிகளை மட்டும் பார்ப்பதில்லை. இப்படிப் பார்ப்பதால் அடுத்தவருடைய கண்ணோட்டத்தில் உள்ள உண்மையை நம்முடைய Higher Self ஏற்கிறது. அது எது செய்தாலும் வாழ்க்கையின் முழுமையை மனதில் வைத்துக் கொண்டுதான் செய்கிறது. நம்முடைய உடனடி தேவைகள் மற்றும் விருப்பங்கள் இதனால் பாதிக்கப்படலாம். ஆனால் நாம் நம்முடைய Higher Selfஇன் முடிவை அமைதியாக ஏற்றுக் கொண்டு நெடுங்காலக் கண்ணோட்டத்தில் பார்த்தால் நம்முடைய Higher Self நமக்கு நல்லது தான் செய்திருக்கிறது என்று தெரிய வரும். ஒரு திருமணம் ஆகாத அன்னை அன்பரான இளைஞர் ஒரு இளம் பெண்ணின் அழகாலும் கவர்ச்சியாலும் ஈர்க்கப்பட்டு அவளை உடனே திருமணம் செய்து கொள்ளத் துடிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவருடைய Higher Self activeஆக இருந்தால் அவருடைய தவிப்பு மற்றும் துடிப்பை அது கவனிக்கும். அவளிடம் அழகு இருக்கிறது, கவர்ச்சி இருக்கிறது, ஆனால் அன்பில்லை, குணமில்லை, முறையாகக் குடும்பம் நடத்தக்கூடிய



குடும்பப் பாங்கில்லை என்று அதற்குப் புரிந்தால் அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற அவருடைய கட்டுக்கடங்காத ஆர்வத்தை அது ஆதரிக்காது. இவருக்கு இருக்கிற அந்தக் காதல் வேகம் மற்றும் இளமை வேகம் மற்றும் கவர்ச்சி மோகத்தால் அவளுடைய குணக்குறைகள் இவருக்குத் தெரியாமல் போகலாம். ஆனால் இவர் கண்ணில் படாதது எல்லாம் இவருடைய Higher Selfஇன் பார்வைக்குப் படும். ஆகவே அவளைத் திருமணம் செய்து கொண்டால் ஒரு வருடம் முடிவதற்குள்ளாகவே அவளுடைய சுயரூபம் தெரிந்து அவருடைய சந்தோஷம் எல்லாம் போய்விடும் என்று அதற்குத் தெரிவதால் அவருடைய நெடுங்கால சந்தோஷத்தை மனதில் வைத்துக் கொண்டு அவளை இவருக்குக் கட்டி வைக்காமல் சற்றே அழகு குறைந்தாலும் குணவதியாகவும், குடும்பப் பாங்கு தெரிந்தவளாகவும் இருக்கின்ற இன்னொரு இளம் பெண்ணைத்தான் அவருக்கு அவருடைய Higher Self திருமணம் செய்து வைக்கும். Higher Selfஇன் முழுமையான பார்வைக்கு இதை நான் உதாரணமாகச் சொல்கிறேன். நம்முடைய Higher Self எப்போதும் சந்தோஷமாக இருப்பதோடு எந்நேரமும் இறைவனிடமும் அன்னையிடமும் இருந்து தான் பெற்றுக் கொண்டதற்கு எல்லாம் நன்றி தெரிவித்துக் கொண்டே இருக்கும். நம்முடைய surface personalityக்கு இருக்கின்ற ஆணவம், மற்றும் அகம்பாவம் அதற்குக் கிடையாது. மாறாக நம்முடைய Higher Selfக்குப் பணிவும் தன்னடக்கமும் மிகவும் அதிகம். அகம்பாவம் பிடித்த மனிதன் எப்போதும் தன்னுடைய பெருமைகளை ஓயாமல் பேசிக் கொண்டே இருப்பான். மற்றவர்களுக்குப் பிடிக்கிறதோ இல்லையோ இவன் பேசுவதை நிறுத்தமாட்டான். ஆனால் நம்முடைய Higher Self இப்படி இருப்பதில்லை. அது தன்னைப் பற்றி நினைப்பதே இல்லை. அது தன்னை மறந்து இறைவனையும் அன்னையையும் அவர்களுடைய

பெருமையைத்தான் நினைத்துக் கொண்டிருக்கும். நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலை எப்படி மாறினாலும் அதனாலெல்லாம் இறைவனோடும் அன்னையோடும் தனக்கு இருக்கின்ற alignment பாதிக்கப்படாத அளவிற்கு செயல்படும் திறனும் இதற்கு உண்டு.

நம்முடைய Higher Self ஒரு அஞ்சா நெஞ்சம் கொண்ட மாவீரன் போன்றது. அதை நம்பி நாம் தைரியமாக இருந்தால் ஆயிரம் போர் வீரர்களைக் களத்தில் சந்திக்கின்ற ஒரே வீரன் போல நாம் வாழ்க்கை என்ற போராட்டக்களத்தில் தனித்து நின்றாலும் இருக்கின்ற எதிர்ப்பை முறியடித்து நம்மை நம்முடைய Higher Self வெற்றி பெறச் செய்யும். இந்த Higher Self கொடுக்கும் தைரியத்துடன் நம் வாழ்க்கையில் வரும் எதிர்ப்புகளைச் சந்திக்கும்போது பெரிய வெல்ல முடியாத பிரச்சனையாக தெரிந்தது சாதாரண சிறிய பிரச்சனையாக மாறிவிடும். அம்மாதிரியே கடக்க முடியாத உயர்ந்த மலை உச்சி போல நம் வாழ்க்கையில் தடையாக நிற்கின்ற ஒரு விஷயம் நம் Higher Self கொடுக்கும் பலத்தோடு செயல்படும்போது வெறும் ஒரு அடி உயரம் உள்ள மணல் கோபுரம் போல சிறிதாகி நம்மால் சுலபமாகக் கடக்கக் கூடியதாகிவிடும். நம்முடைய Higher Self கற்பனை செய்ய முடியாத அளவிற்குப் பெருந்தன்மையாக இருப்பதுண்டு. நம்முடைய வருமானம் மற்றும் உடைமைகளையும் உரிமைகளையும் அடுத்தவர்கள் பறிக்கிறார்கள் என்று நாம் அலறும் போது நம்முடைய Higher Self நமக்கு நேர் எதிர்மாறான அணுகுமுறையை எடுத்துக் கொள்கிறது. பிடுங்க வருகின்றவரிடம் நீ உரிமையோடு எடுத்துக் கொள்ளலாம் என்று தானே விரும்பி அவருக்கு எடுத்துக் கொடுப்பதைப் போல நம் Higher Self நடந்து கொள்ளும். கோட் ஸ்டாண்டில் மாட்டி இருக்கின்ற உங்கள் சட்டை பாக்கெட்டிலிருந்து உங்களிடம் சொல்லாமல் உங்கள் மனைவி ரூ.1000/- எடுத்துச்



செலவழித்திருந்தால் அது தெரிய வரும் போது நீங்கள் கோபப்படுவீர்களா? அல்லது தான் சாப்பிடுவதற்காக ஒரு தாயார் தன் தட்டில் வைத்திருந்த ஒரு இனிப்புப் பண்டத்தைத் தாயாரைக் கேட்காமல் குழந்தை எடுத்துச் சாப்பிட்டுவிட்டது என்றால் அதைக் கண்டு தாயார் கோபப்படுவாரா? அவரவருடைய மனைவி மற்றும் குழந்தைகள் அவரவர்களுடைய Selfஐச் சேர்ந்தவர்கள் என்னும் போது அவர்களுடைய அனுமதியில்லாத செயல்பாடுகளையும் சம்பந்தபட்டவர்கள் சரி என்று எடுத்துக் கொள்கிறார்கள். நம் குடும்பம் என்ற ஒரு குறுகிய வட்டத்திற்குள் இருப்பவர்களை எல்லாம் நாம் எப்படி நமக்கு உரியவர்கள், நமக்குச் சொந்தமானவர்கள், நம்முடைய Higher Selfஐச் சேர்ந்தவர்கள் என்று எடுத்துக் கொள்கிறோமோ அப்படியே சமூகம் என்ற பெரிய வட்டத்திற்குள் இருப்பவர்களையும் நம்முடைய Higher Self தனக்குள் இருப்பவர்களாகவும், தன்னைச் சேர்ந்தவர்களாகவும் எடுத்துக் கொள்கிறது. அதனுடைய கண்ணோட்டம் இப்படி இருப்பதால் நம்முடைய நஷ்டத்தைக் கண்டு அது வருத்தப்படுவதோ சோகத்தில் மூழ்குவதோ இல்லை. இருந்தாலும் நம்முடைய surface personalityஇல் நாம் நஷ்டப்பட்டுவிட்டதாக நினைத்து வருத்தப்படுவதாலும் நமக்கு உரிமையானது பறிபோய்விட்டது என்று நாம் கொதித்துப் போவதாலும் நம்மைச் சாந்தப்படுத்தும் வகையிலும் நாம் இழந்ததை ஈடுசெய்யும் வகையிலும் செயல்பட அது முடிவெடுக்கிறது. நம் Higher Selfனுடைய ஆற்றல் மிகப்பெரியது என்பதால் இப்படி நாம் இழந்ததை அது திருப்பித் தர முயற்சி செய்யும் போது நாம் இழந்தது எவ்வளவோ அதே அளவிற்கு அது திருப்பித் தருவதில்லை. மாறாக, நாம் இழந்ததைவிட நூறு மடங்கு அல்லது ஆயிரம் மடங்கு அதிகமாக நமக்கு திருப்பி கொடுத்துவிடுகிறது.

ஏற்கனவே சொன்னது போல நம்முடைய Higher Selfஇனுடைய எனர்ஜி அளவுகடந்த ஒன்றாகும். நாம் ஒரு

நாளைக்கு எட்டு மணி நேரம் வேலை செய்தாலே நம்முடைய உடம்பு களைத்துப் போய்விடுகிறது. ஆனால் நம்முடைய Higher Self வழங்கும் எனர்ஜியை வைத்துக் கொண்டு நாம் வேலை செய்ய ஆரம்பித்தால் நாள்கணக்காக சரியான தூக்கம் இல்லாமல், சரியான சாப்பாடு இல்லாமல் நாம் வேலை செய்தாலும் நமக்குக் களைப்புத் தெரியாது. இந்த Higher Selfஇனுடைய எனர்ஜி நம்முடைய அறிவில் வெளிப்படும்போது முழுமையான knowledgeஆகவும் நம்முடைய பகுத்தறிவைத் தாண்டி செயல்படுகின்ற intuitionஆகவும் பகுதியான பார்வையாக இல்லாமல் முழுமையான பார்வையாகவும் வெளிப்படும். மேலும் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று மூன்று காலங்களையும் ஒருசேரப் பார்க்கும் திறமையையும் மேலோட்டமாக முரண்பாடாகத் தெரிகின்றவற்றை உடன்பாடுகளாகப் பார்க்கின்ற திறனையும் வழங்கும். அடுத்ததாக நம்முடைய உணர்வு நிலையில் Higher Self வெளிப்படும்போது நிபந்தனையற்ற அன்பாகவும் அளவுகடந்த நல்லெண்ணமாகவும், நிரந்தர சந்தோஷமாகவும், முறியடிக்க முடியாத மனோபலம், அசைக்க முடியாத அமைதி, மற்றும் நிதானம் ஆகியவற்றோடு அடுத்தவர் உடம்பே கரைந்து போகக்கூடிய அளவிற்கு ஒரு இனிமையாகவும் வெளிப்படும். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் ஒரு இடையறாத நன்றியறிதலை இறைவனுக்கு வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். நம் உடம்பு லெவலில் வெளிப்படும் பொழுது களைப்பே வராமல் நீண்ட நேரம் உழைக்கக்கூடிய உடல் தெம்பாகவும், விரைவான மற்றும் நளினமான உடல் movementsஆகவும், ஒரு வருடத்தில் செய்யக்கூடிய வேலையை ஒரு சில நாட்களிலும், ஒரு சில நாட்களில் செய்யக்கூடிய வேலையை சில மணி நேரத்திலும், சில மணி நேரத்தில் செய்யக்கூடிய வேலையை சில நிமிடங்களிலும் செய்யக்கூடிய திறமையாகவும் வெளிப்படும்.



மேலும் உடல் அளவில் Higher Selfஇன் எனர்ஜி வெளிப்படும் பொழுது மாற்ற முடியாத habits மற்றும் பழக்கவழக்கங்களில் நம் உடம்பு சிக்கிக் கொள்ளாமல் சுதந்திரமாகச் செயல்படும் அளவிற்கே நம் உடம்பை வைத்திருக்கும். வேறு வகையாகச் சொன்னால் நாம் ஏற்கனவே செய்த வேலைக்கு உண்டான பழக்கவழக்கங்களும் அணுகுமுறைகளும் புதிதாகச் செய்கின்ற வேலையில் குறுக்கிடாத அளவிற்கு நம்முடைய Higher Self பார்த்துக் கொள்ளும். நம் Higher Selfனுடைய power of spiritual plasticity நம் உடம்பு நிலையில் வெளிப்படும்போது இப்படியெல்லாம் வெளிப்படும்.

நம்முடைய Higher Self activeஆகச் செயல்படும்பொழுது அதனால் விளைகின்ற நன்மைகள் நம்முடைய உடல்நலம் என்ற விஷயத்தில் மிகத்தெளிவாகத் தெரியும். நம்முடைய உடம்பின் எனர்ஜி லெவலை எப்பொழுதுமே அது positive sideஇலேயே வைத்துக் கொள்ளும். அதாவது வேலை செய்வதால் நாம் செலவு செய்கின்ற எனர்ஜியைவிட கூடுதலாகவே நமக்கு Higher Self எனர்ஜியை வழங்கிவிடும். உதாரணமாக ஒரு நாளைக்கு 1000 யூனிட் எனர்ஜியை வேலையில் செலவு செய்வதாக வைத்துக் கொள்வோம். நம்முடைய Higher Self நமக்கு 2000 யூனிட் எனர்ஜியை வழங்கிவிடும். ஆகவே ஒரு நாள் இறுதியில் வேலையெல்லாம் முடித்துவிட்டு நாம் ஓய்வு எடுக்கும் பொழுது நம்முடைய உடம்பில் செலவு செய்த எனர்ஜி போக net positive balanceஆக ஒரு ஆயிரம் யூனிட் எனர்ஜி இருக்கும். இப்படி நம்முடைய எனர்ஜி லெவல் எப்பொழுதுமே positive sideஇல் இருக்கும் என்றால் உடல் நலக்குறைபாடு நம் உடம்பில் எப்படி வரும் என்ற கேள்வி வருகின்றது. நாம் அறிவில்லாமல் நம் உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்ளும் வகையில் ஏதேனும் செய்தாலன்றி நமக்கு உடல்நலப் பிரச்சனைகள் வர வாய்ப்பில்லை. மேலும் நம்முடைய Higher Self activeஆக இருக்கும்பொழுது

நம்முடைய மேனி பளபளவென்று மினுக்கும் வண்ணம் ஒரு ஒளி படர்ந்திருக்கும். நமக்கு 40 அல்லது 50 வயது ஆகியிருந்தாலும் அந்த வயதிற்கே பொருத்தமில்லாத ஒரு இளமையான முகத்தோற்றத்தை நம்முடைய Higher Self நமக்கு வழங்கும். ஒரு நிரந்தர புன்சிரிப்பை நம் முகத்தில் பதியவைத்து யார் நம்மிடம் நெருங்கி வந்தாலும் நம்மிடம் ஒரு தெய்வீக அம்சம் செயல்பட்டுக் கொண்டிருப்பதை புரிந்து கொள்ளும் அளவிற்கு அது அவர்களை உணர வைக்கும். மேலும் நாம் வெளிப்படுத்துகின்ற எனர்ஜிக்கும், நாம் சாப்பிடுகின்ற சாப்பாடு, நாம் செய்கின்ற வேலை மற்றும் நாம் இருக்கின்ற இடத்தில் உள்ள வானிலை என்று எவற்றிற்குமே சம்பந்தம் இல்லாததாகக் காண்பிக்கும். அதாவது எனர்ஜி லெவலைப் பற்றி நமக்கு இருக்கின்ற understandingஐ முற்றிலுமாக முறியடித்துக் காட்டும்.

நம்முடைய Higher Selfனுடைய சுபாவம் இவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது என்றால் இப்படிப்பட்ட ஒரு Higher Self நமக்குள் activeஆக இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்து கொள்ள நமக்கு ஒரு ஆர்வம் வருவது இயற்கை. இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம். இரண்டு விதமான வாய்ப்புகளும் உள்ளன. இருந்தாலும் நாம் அன்னையிடம் வந்திருக்கிறோம் என்பதை வைத்துப் பார்க்கும்போது அது நமக்குள் activeஆக இருக்க வாய்ப்பு இருக்கிறது. இதை பரிசோதித்துத் தெரிந்து கொள்ள நமக்கு ஒரு வழியும் இருக்கிறது. நமக்குள் ஒரு Higher Self activeஆக இருக்கிறதா என்று தெரியப்படுத்தச் சொல்லி நாம் அன்னையிடம் கேட்கலாம். நாம் சின்சியராகவும், சீரியஸாகவும் அன்னையிடம் சரியாக காலை 6 மணிக்குச் சொன்னால் மாலை 6 மணிக்குள் அது நமக்குள் activeஆக இருக்கிறதா, இல்லையா என்பதை அன்னை காண்பித்து விடுவார்கள். அது இருக்கிறது என்றால் அது தான்



இருப்பதை நமக்குத் தெளிவாக அறிவிக்கும். நாம் எதிர்பார்க்காத ஒரு பெரிய நல்ல செய்தி நம்மைத் தேடி வரலாம் அல்லது நீண்ட காலமாக தீராது இருந்த ஒரு பிரச்சனை உடனடியாகத் தீரலாம். ஏமாற்றமும் நஷ்டமும் தான் ஒரு விஷயத்தில் நமக்கு காத்திருக்கின்றது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது நிலைமை தலைகீழாக மாறி நமக்குச் சந்தோஷமும், நல்ல பலனும் கிடைத்து நம்மை வியப்புக்குள் ஆழ்த்தலாம். அல்லது காரணமே இல்லாமல் நமக்குக் காலையிலிருந்து மாலை வரையிலும் ஒரு கட்டுக்கடங்காத சந்தோஷமும், உற்சாகமும் வரலாம். ஆகவே அறிகுறிகள் எந்த ரூபத்தில் வந்தாலும் நாம் அவற்றை சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டும். Higher Self இருக்கிறது என்று நமக்கு உறுதியாகத் தெரியும்பட்சத்தில் அதனுடைய தேவைகளுக்கு ஏற்றபடி நம்முடைய வாழ்க்கையை நாம் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். அதாவது நம்முடைய இலட்சியங்கள், வேல்யூக்கள், நாம் செயல்படும் பாணி மற்றும் நமக்குண்டான வேலையை எதிர்கொள்ளும் அணுகுமுறைகள் என்று எல்லாவற்றையும் நாம் இப்பொழுது நம்முடைய Higher Selfக்கு ஏற்றபடி மாற்றியாக வேண்டும். இதுவரை நமக்காக வாழ்ந்திருந்தால் இப்பொழுது அந்த இடத்திலிருந்து மாறி நாம் அன்னைக்காக வாழ முன்வர வேண்டும். பணம், பதவி, அந்தஸ்து, இதைத்தான் நாம் இதுவரையிலும் நாடி இருக்கிறோம் என்றால் இனிமேல் இவற்றைத் தவிர்த்து ஆன்மீக வளர்ச்சி, திருவுருமாற்றம், அன்னை சேவை என்று இவற்றை நாட வேண்டும். இதுவரை நாம் நம்முடைய பணபலம், பதவி பலம், அறிவு பலம் என்று இவற்றை நம்பி செயல்பட்டிருந்தோம் என்றால் இனிமேல் இவற்றிற்குப் பதிலாக அன்னை மேல் வைத்திருக்கும் நம்பிக்கை, பக்தி மற்றும் மௌன சக்தி, மற்றும் உள் மனமாற்றம், என்று இவற்றை பிரதானமாக வைத்துச் செயல்பட வேண்டும்.

இப்படியெல்லாம் நாம் மாற்றங்களைக் கொண்டு வந்தால்தான் இத்தனை நாள்வரையிலும் நாம் கண்டுகொள்ளாத நமக்குள் அமர்ந்திருக்கின்ற தெய்வீக விருந்தாளியை நாம் இனிமேலாவது முறையாக நடத்துவோம் என்று அர்த்தமாகும். இத்தனை நாள் நாம் நமக்குள் இருக்கின்ற Higher Selfஐ கண்டுகொள்ளவில்லை என்பதால் அது நம்மேல் கோபித்துக் கொள்ளப்போவது இல்லை. மாறாக, என்றைக்கு அதனுடைய presenceஐ நாம் உணர்ந்து கொள்கிறோமோ அன்றிலிருந்தே அது நம்மோடு ஒத்துழைக்க ஆரம்பிக்கும்.

அப்படி நமக்குள் activeஆன Higher Self இல்லை என்று வாழ்க்கை நமக்கு அறிவித்தால் அதற்காக நாம் ஏமாற்றம் அடைவதோ, வருத்தப்படுவதோ தேவையில்லை. Higher Self இருப்பதாகத் தெரியவில்லை என்றால் அது நாம் உணர முடியாத அளவிற்கு ஆழத்தில் இருக்கிறது என்றும், அதனை மூடி அழுத்திக் கொண்டிருக்கின்ற அறியாமை, பொய், மற்றும் தமஸ் ஆகிய திரைகள் அதாவது layers வழக்கத்தைவிட சற்று அதிகமாக இருக்கின்றன என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இந்த வேண்டாத போர்வைகளை எல்லாம் களைந்து எடுத்துவிட்டு, இவற்றால் மூடி மறைக்கப்பட்டிருந்த Higher Selfஐ வெளியே கொண்டு வர வேண்டும் என்றால் நாம் maximum முயற்சி எடுக்க வேண்டும் என்று புரிந்து கொள்ள வேண்டும். ஒரு விவசாயி தன் நிலத்தில் உள்ள பயிருக்குத் தண்ணீர் பாய்ச்ச நீர் ஆதாரம் தேடுவதாக வைத்துக் கொள்வோம். பூமிக்கு அடியில் 20 அடி ஆழத்தில் நீர் இருப்பதாக அவருக்குத் தெரிய வருகிறது. அப்படித் தெரிய வரும்பொழுது கிணறு வெட்டியோ அல்லது borewell போட்டோ இந்தத் தண்ணீரைப் பார்க்கும்வரையிலும் அவர் ஓயமாட்டார். அம்மாதிரி நம்முடைய ஜீவனின் ஆழத்தில் Higher Self இருக்கிறது என்று நமக்குத் தெரிந்தால் இடையில் தடையாக இருக்கின்ற அறியாமை, பொய் மற்றும் தமஸ் ஆகிய



இடர்பாடுகளைக் களைந்தெடுத்து Higher Selfஐ மேலே கொண்டு வரும் வரையிலும் அந்த விஷயத்தில் தீவிரமாக உள்ளவர்கள் அதற்குண்டான முயற்சிகளை நிறுத்தக் கூடாது. இத்தகைய ஒரு முயற்சிக்கு உண்டான மன உறுதியோ அல்லது அறிவுத் தெளிவோ நமக்கு இல்லை என்று நாம் நினைத்தாலும் அதன் காரணமாகவும் தைரியம் இழக்க வேண்டாம். நமக்குத் தெரிந்தவர்களில் இப்படி ஒரு Higher Self உள்ளவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். அப்படி ஒருவர் இருக்கிறார் என்றால் அவரோடு ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அவருடைய வழிகாட்டல் கிடைக்குமா, அதன்படி செயல்பட முடியுமா என்று நாம் பார்க்க வேண்டும். திரு. கர்மயோகி அவர்கள் இருக்கிறார், ஆனால் தொடர்பு கொள்ள முடியாத இடத்தில் இருக்கிறார் என்று நாம் கவலைப்பட வேண்டாம். அவருடைய புத்தகங்கள் மூலம் நாம் அவரோடு நெருக்கமான தொடர்பையே வைத்துக் கொள்ளலாம். அவரெழுதிய ஸ்ரீ அரவிந்தம், Spirituality and Prosperity volumes, பொன்னொளி, பூலோக சுவர்க்கம், தத்துவ ஞானம், யோக வாழ்க்கை விளக்கம் போன்ற புத்தகங்களிலும், திரு. Garry Jacob அவர்கள் எழுதியுள்ள Life Divine lectures மற்றும் அதற்கு நான் எழுதிய Life Divine விரிவுரைகள் தமிழாக்கத்திலும் Higher Selfஐ எப்படி வளர்த்துக் கொள்வது என்பது பற்றிய நிறைய குறிப்புகள் உள்ளன. இவற்றை எல்லாம் நாம் படிக்க வேண்டும். இப்படி எல்லாம் செய்து திரு. கர்மயோகி அவர்கள் எதிர்பார்க்கின்ற தீவிரத்தை நம்முடைய முயற்சியில் கொண்டு வந்தோம் என்றால் ஒரு காலகட்டத்தில் நம்முடைய Higher Self மேலே வெளிப்பட்டு நமக்கு ஒரு பேரானந்தத்தை வழங்கும்.

நான் இதுவரையிலும் Higher Selfனுடைய Nature என்ன, அதனுடைய விசேஷ குணாதிசயங்கள் மற்றும் ஆற்றல்கள் என்ன

என்று சொல்லியவை எல்லாம் என்னுடைய வெறும் கற்பனையில் பிறந்த விஷயங்கள் இல்லை. இந்த பரிசோதனையை சீரியஸாகப் எடுத்துக் கொண்டு அதில் தீவிரமாக இறங்கி வெற்றி பெறுபவர்கள் நான் சொன்னதெல்லாம் எந்த அளவிற்கு உண்மை என்று அவர்களே உணர்ந்து கொள்வார்கள். இந்த Higher Selfஐத் தேடிக் கண்டுபிடிக்கத் தான் நாம் அன்னையிடம் வந்துள்ளோம். நாம் எதற்காக வந்தோமோ அந்த முயற்சியில் நாம் வெற்றி பெறும்பட்சத்தில் நமக்குக் கிடைத்துள்ள Higher Selfஇனுடைய தொடர்பு நாளாவட்டத்தில் அன்னையினுடைய தரிசனத்தையே நமக்கு அகக்காட்சியில் கிடைக்க வழி செய்யும். அப்படி ஒரு அற்புதமான காட்சி நமக்குக் கிடைக்கின்றபொழுது அந்தக் காட்சி கிடைப்பதற்கு நமக்கு வழி செய்த நம்முடைய Higher Selfக்கு இந்தச் சமயத்தில் நாம் கண்டிப்பாக நன்றி கூற வேண்டும். நம்முடைய நன்றியறிதலை அது எதிர்பார்க்கிறது, கேட்கிறது என்றெல்லாம் நான் சொல்லவில்லை. அது கேட்கிறதோ, இல்லையோ நன்றி சொல்வது நமக்கு நல்லது என்பதால் நான் இதைச் சொல்கிறேன்.

*முற்றும்.*

❃❃❃

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# கூடி வரும்

செய்யும் காரியம் பலிப்பது கூடி வருவது. பலருக்குப் பலிக்காது. சிலருக்கு சில பலிக்கும். **அனைவருக்கும் எதிர்பார்ப்பு இருக்கும். மேல் மனத்திலில்லாதவர்க்கு ஆழத்திலிருக்கும்**. எதிர்பார்ப்பு எந்த வகையானாலும், அது உள்ளதை தள்ளிப் போடும். விஷயம் கூடிவர நிபந்தனைகளுண்டு. வரன் பார்க்கும்பொழுது, வேலை தேடும்பொழுது, தொழிலை விரிவுபடுத்த முயலும்பொழுது மனம் உள்ளிருந்து பேசும். அது பல வகை: பிராப்தம் வேண்டாமா?, நாம் முயல்வது தவறில்லையே, முயற்சிக்குத் தானே பலிக்கும், நேரம் வர வேண்டுமல்லவா, எதற்கும் அளவில்லையா எனப் பலவிதமாக மனம் பேசினாலும் செயல் மாறுவதில்லை. மேற்சொன்னவை அனைத்தும் அன்பரானபின் உண்மையில்லை என்பது அன்பர் அனுபவம். அவை: இதெல்லாம் நான் நினைத்தும் பார்த்ததில்லை, நான் எங்கிருந்தேன், இப்பொழுது எப்படியிருக்கிறேன் என நம்ப முடியவில்லை, நானிருந்த இடம் புல் முளைத்துப் போயிருக்கும், இப்பொழுது வசதியாக செல்வாக்காக இருக்கிறேன், நான் பெற்றவை ஜாதகத்திலில்லை.

இத்தனையும் கடந்து காரியம் கூடி வரும் சட்டங்கள் பல:

1. வருவது உள்ள தெம்பிற்குரியது.
2. **உள்ள தெம்பை உயர்த்தும் வழி ஏராளம்**.
3. புறத்தை நாடுவதைவிட அகம் தயாராவது கூடி வர உதவும்.
4. இல்லாத தெம்பிற்கு எதுவும் கூடி வாராது.

உள்ளே போய் மனத்தையும், அதன் நிலைகளையும், நம்பிக்கைகளையும் கலந்து அவற்றைத் தூய்மைப்படுத்தி, தெளிவுபடுத்துவது உள்ளே உள்ள தகுதியை வலுப்படுத்துவது. ஆசை, அவசரம், பெருமை போன்ற இயல்பான குறைகட்கு இடமில்லை. சொத்துக்கே (personality) ராசியுண்டு. தன் 540 ஏக்கர் சொத்தை விற்றுவிட்டு வேறு ஊரில் 120 ஏக்கர் வாங்க 8 வருஷமாக முனைந்தவர்க்கு பேரம் படியவில்லை என்ற நிலையும் எழவில்லை. சொத்தே அமையவில்லை. மார்ச்சில் பெரும் சொத்தை விற்றார். மே மாதத்தில் அடுத்தவூர் சொத்து பேரம் படிந்துவிட்டது.

☆ **கையில் பணமில்லாவிட்டால் சொத்து வாராது என்பது சொத்துடைய சட்டம்.**

மனம் தன்னை தயார் செய்ய அளவில்லை. புறத்திற்கு சந்தர்ப்பம் அளவு ஏற்படுத்தும். அகத்திற்கு அளவில்லை. அளவை நிர்ணயிப்பது நாம். தன்மைக்கு நிபந்தனையுண்டு. தரத்திற்கு அளவில்லை.

***கூடி வருவது மனநிலையால், அதன் தன்மையால்,***
***பவித்திரத்தால் நிர்ணயிக்கப்படும்.***

❋❋❋

# குழந்தையுள்ளம்

குழந்தைகள் பிரார்த்தனை எதுவும் தவறுவதில்லை என்பதை குழந்தைகள் அறியும்.

பெரியவர்கள் குழந்தையுள்ளம் பெறுவது - தாமரையிலைத் தண்ணீர் - அதனினும் பெரியது.

அன்னை பிரார்த்தனையைப் பூர்த்தி செய்யும் வகை பல.

| | |
|---|---|
| 1. நாம் தேடும் உதவி கிடைக்காத காலத்து அதைப் பெற்றுத் தருவது. | நம்பிக்கையேயில்லாதவருக்கு அன்னை அவர் நம்பிக்கை மூலம் செயல்படுவது. |
| 2. நமக்குத் தெரியாத சந்தர்ப்பம் மூலம் நிறைவேற்றுவது. | சிறு நம்பிக்கைக்கு உரியவர் வாழ்வை விரிவுபடுத்தி செயல்படுவது. |
| 3. புதிய சட்டமியற்றி பிரார்த்தனையைப் பூர்த்தி செய்வது. | பெரும் நம்பிக்கையுள்ளவர் வாழ்வில் செயல்படுவது. |
| 4. மந்திரம் போல் காரியம் நடப்பது. | சூட்சும நம்பிக்கையுள்ளவர்கள் இவர்கள். |
| 5. எதிர்ப்பை விலக்கி செயல்படுவது. | நல்லெண்ணமுள்ள அன்பர்கள் இவர்கள். |
| 6. எதிரியை நண்பனாக மாற்றுவது. | எதிரிக்கும் உதவும் மனமுடைய அன்பன். |
| 7. விளக்க முடியாதபடி நடப்பது. | அருளுக்குப் பாத்திரமான உள்ளம். |
| 8. பொய்யை நம்பி வாழ்பவனை மெய்யாகச் செயல்படச் செய்வது. | **ஜீவனில் பொய்யை மெய்யாக்கும் திறனுடையவர்**. |
| 9. கேட்டதை விட அதிகமாகக் கிடைப்பது. | கேட்காமல் உதவும் மனமுடையவர். |
| 10. பிறருக்கு அவர் எதிர்ப்பை மீறிப் பெரும் பலனளிப்பது. | ஆத்மா வாழ்வில் சைத்திய புருஷனாவது. |

கையிலுள்ள பேனா *சாவித்திரியில்* தவறி கோடிட்டுவிட்டதைக் கண்ட சிறு குழந்தை பிரார்த்தனை செய்த பொழுது அது பலித்தது. கோடு மறைந்தது.

***குழந்தையுள்ளம் கேள்வி கேட்டறியாதது.***
***அதனால் மந்திர சக்தி செயல்பட்டது.***
***அன்னையின் சக்தி மந்திர சக்தி.***

❋❋❋

Vol. II Issue 3 June 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

| | |
|---|---|
| **ESSAYS ON ACCOMPLISHMENT**<br>**N.Asokan** | ரூ.150/- |

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| **அன்னையின் ஆன்மீகப்பரிசு** | ரூ.100/- |
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

**சொஸைட்டியின் பிற வெளியீடுகள்**

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>(CONCISE TRUISMS)<br>**N.Asokan** | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொஸைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்டா நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
23/1, மேற்கு சாலை,
மேற்கு C.I.T. நகர்,
சென்னை - 600 035.
✆: (044)-24347191

Vol. II Issue 3 June 2012

# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

## ஜுன் 2012